Postal Reg.No. GDP-39/2017-2019

بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 39

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

7 முஹர்ரம் 1439 ஹிஜ்ரி கமரி 28 தபூக் 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

28 செப்டம்பர் 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல–னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நான் உண்மையைக் கூறுகின்றேன். இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நானும் எனது ஜமாஅத்தும் முஸ்லிம்கள் ஆவோம். ஓர் உண்மையான முஸ்லிம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் திருக்குர்ஆனின் மீதும் எவ்வாறு நம்பிக்கை கொள்ள வேண்டுமோ அவ்வாறே அந்த ஜமாஅத் நம்பிக்கை கொண்டிருக்கின்றது.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

நான் மிகவும் வருத்தத்துடனும் உள்ளத்தில் வேதனையுடனும் இந்த விஷயத்தைக் கூறுகின்றேன். அதாவது, சமுதாயம் என்னை எதிர்ப்பதில் அவசரம் மட்டும் காட்டவில்லை. மாறாக, மிகவும் இறக்கமில்லாமலும் அவர்கள் நடந்து கொண்டனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பான ஒரு பிரச்சனையில் மட்டுமே கருத்து வேறுபாடு இருந்தது. அதனை நான் திருக்குர்ஆன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறை, சஹாபாக்களின் ஒருமித்த கருத்து, அறிவுப்பூர்வமான ஆதாரங்கள், கடந்த காலத்திலிருந்த நூல்கள் ஆகியவற்றிலிருந்து நிரூபித்திருந்தேன். இப்போதும் நிரூபிக்கின்றேன். ஹனஃபீ மத்ஹபிற்கு ஏற்ப திருக்குர்ஆன், ஹதீஸ், கியாஸ் மற்றும் ஷரீஅத்திலுள்ள ஆதாரங்கள் என்னுடன் இருக்கின்றன.

ஆனால் அந்த மக்கள் முழுமையான முறையில் என்னிடம் கேட்காமலும் எனது ஆதாரங்களை செவிமடுக்காமலும் இந்த பிரச்சனையை எதிர்ப்பதில் எந்த அளவு மிகைத்து விட்டனர் என்றால் என்னை அவர்கள் காஃபிர் என்று கூறியுள்ளனர். அத்துடன் இன்னும் அவர்கள் விரும்பியதைக் கூறினர். என் மீது குற்றங்களைச் சுமத்தினர். நேர்மை, நன்மையான செயல் மற்றும் இறையச்சம் எதிர்பார்ப்பது என்னவென்றால், அவர்கள் முதலில் என்னிடம் கேட்டிருக்க வேண்டும். நான் அல்லாஹ் கூறியவற்றிலிருந்தும் தூதர் கூறியவற்றிலிருந்தும் வெளியேறி வரம்பு மீறி செயல்பட்டிருந்தால் பிறகு சந்தேகமின்றி என்னை தஜ்ஜால், பெரும் பொய்யன் என்றெல்லாம் தாங்கள் விரும்புவது போன்று கூறுவதற்குரிய உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

ஆனால், தொடக்கத்திலிருந்தே நான் திருக்குர்ஆனையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் பின்பற்றுவதிலிருந்து விலகி சிறிது இங்குமங்கும் செல்வதை ஈமான் இல்லாத நிலையாக கருதுகின்றேன் என்றே கூறி வந்துள்ளேன். யார் இதனை சிறிதளவு கை விட்டு விடுவாரோ அவர் நரகவாசியாவார் என்பதே எனது கொள்கையாகும். பிறகு இந்த கொள்கையை எனது சொற்பொழிவுகளில் மட்டுமல்லாமல் ஏறக்குறைய எனது அறுபது நூல்களிலும் மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளேன். இரவும் பகலும் எனக்கு இதே கவலையும் எண்ணமும்தான் இருக்கின்றது. பிறகு இந்த எதிரிகள் இறைவனுக்கு அஞ்சுபவர்களாக இருந்தால் இந்த விஷயம் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. இதற்கான காரணம் என்ன ? அல்லது இதற்கு நீங்கள் என்ன பதில் கூறுகின்றீர்கள் ? என்று என்னிடம் கேட்பது அவர்களின் கடமையில்லையா ? ஆனால், அவ்வாறு அவர்கள் செய்யவில்லை. இதனை சிறிதளவு கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஒன்றைக் கேட்ட மாத்திரத்திலேயே என்னை காஃபிர் என்று கூறி விட்டனர். நான் மிகவும் வியப்புடன் இவர்களின் இந்த செயல்களைப் பார்க்கின்றேன். ஏனென்றால், முதலில் ஈஸா (அலை) உயிருடன் இருப்பது அல்லது மரணிப்பது என்ற விஷயமொன்றும் இஸ்லாத்தில் நுழைவதற்கு நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ள ஒரு விஷயமல்ல. இங்கும் கூட இந்துக்களும் அல்லது கிறித்தவர்களும் முஸ்லிம்களாக ஆகின்றனர். ஆனால் கூறுங்கள். நீங்கள் அவரிடம் اٰمَنْتُ بِاللّٰهِ وَمَلَائِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ وَالْقَدْرِ خَيْرِهٖ وَشَرِّهٖ مِنَ اللّٰهِ تَعَالٰى وَالْبَعْثِ بَعْدَ الْمَوْتِ (நாங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனது மலக்குகள் மீதும் அவனது வேதங்கள் மீதும் அவனது தூதர்கள் மீதும் நன்மை மற்றும் தீமை இறை நியதிக்கேற்ப அல்லாஹ்விடமிருந்தே வருகின்றது என்பதன் மீதும் மரணத்திற்குப் பிறகு மீண்டும் எழுப்பப்படுவதன் மீதும் நான் நம்பிக்கை கொள்கின்றேன்) என்பதைத் தவிர அவர்களிடம் (ஈஸா உயிருடன் இருக்கின்றார்) என்ற இந்த உறுதிமொழியையும் கூற வேண்டும் என்று கூறுகின்றீர்களா ? இந்த விஷயம் இஸ்லாத்தின் ஒரு பகுதியாக இல்லாத போது பிறகு ஈஸா இறந்து விட்டார் என்ற அறிவிப்பை செய்ததற்காக இவர்கள் காஃபிர்கள் ஆவர். தஜ்ஜால்கள் ஆவர். இவர்களை முஸ்லிம்களின் கபருஸ்தானில் அடக்கம் செய்யக் கூடாது. இவர்களது பொருள்களைக் கொள்ளையடிப்பது ஆகுமானதாகும். இவர்களது பெண்களை திருமணம் செய்து கொள்ளாமலேயே வீட்டில் வைத்திருப்பது சரியானதாகும். இவர்களை கொலை செய்வது நற்கூலிக்குரிய பணியாகும் போன்ற விஷயங்களைக் கூறும் அளவிற்கு இந்த அளவு என் மீது ஏன் கடுமை காட்டப்படுகின்றது ?

ஒரு காலம் இருந்தது. அப்போது இதே மவ்லவிகள், ஒருவரிடம் நிராகரிப்பின் 99 காரணங்கள் இருந்து இஸ்லாத்தின் ஒரு காரணம் இருந்தாலும் கூட அவரைப் பற்றி காஃபிர் என்று ஃபத்வா கொடுக்கக் கூடாது. அவரை முஸ்லிம் என்றே கூற வேண்டும் என்று கூச்சலிட்டு வந்தனர். ஆனால், இப்போது என்ன ஆகி விட்டது ? நான் அவரை விட மோசமானவனாக ஆகி விட்டேனா என்ன ? நானும் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களும் اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ என்று கூறவில்லையா ? நான் தொழுவதில்லையா என்ன ? அல்லது எனது சீடர்கள் தொழாமல் இருக்கின்றனரா என்ன ? நாங்கள் ரமலானின் நோன்புகளை நோற்பதில்லையா ? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் வடிவில் நமக்கு போதனை செய்துள்ள அந்த எல்லா கொள்கைகளையும் நாங்கள் பேணுவதில்லையா ?

நான் உண்மையாகவே கூறுகின்றேன். இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். நானும் எனது ஜமாஅத்தைச் சார்ந்தவர்களும் முஸ்லிம்கள் ஆவோம். ஓர் உண்மையான முஸ்லிம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் திருக்குர்ஆனின் மீதும் எவ்வாறு நம்பிக்கை கொள்ள வேண்டுமோ

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

இன்று நாம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கு ஒன்று கூடியுள்ளோம். ஒவ்வோர் அஹ்மதியும் அறிந்தது போன்று மாநாட்டிற்காக நாம் இங்கு ஒன்று கூடியிருப்பது என்பது உலகக் கூச்சல், கொண்டாட்டங்கள் அல்லது வேறெந்த உலக நோக்கங்களுக்காகவும் அல்ல. மாறாக, இங்கு மாநாட்டின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆன்மீக சூழலில் தங்கி, தமது ஆன்மீகத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும், அறிவார்ந்த ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், தமது கொள்கை நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்காகவுமே நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம். மேலும், நமது செயல் நிலைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்வதற்கும், அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதற்காகவும் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் பைஅத்தின் குறிக்கோள் தொடர்பாகவும் அதற்கு எதிராக உள்ள விஷயங்கள் தொடர்பாகவும் ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும் இது தொடர்பாக ஜமாஅத் சகோதரர்களுக்கு மிகவும் முக்கியமான அறிவுரைகளை எடுத்துக் கூறினார்கள்.

மாநாட்டின் நாட்களில் இதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, மாநாட்டின் நாட்களில் இங்கும் அங்கும் சுற்றித் திரிவதற்குப் பகரமாக நிகழ்ச்சிகளைக் கேளுங்கள். அனைத்து சொற்பொழிவுகளையும் கேளுங்கள். ஒவ்வொரு சொற்பொழிவும் ஏதாவதொரு வகையில் அறிவு, கொள்கை மற்றும் ஆன்மீக முன்னேற்றங்களுக்கான காரணியாக இருக்கும்.

---

மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் டியூட்டி கொடுப்பவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்குங்கள். டியூட்டி கொடுக்கும் அனைவரும் அவர்கள் எங்கு டியூட்டி கொடுத்துக் கொண்டிருந்தாலும் ஒவ்வொருவருடனும் மிகுந்த நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஜெர்மனி Karlsruhe -விலுள்ள DM Arena என்ற இடத்திலுள்ள மாநாட்டுத் திடலில் 25 ஆகஸ்டு 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **25 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

இன்று நாம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கு ஒன்று கூடியுள்ளோம். ஒவ்வோர் அஹ்மதியும் அறிந்தது போன்று மாநாட்டிற்காக நாம் இங்கு ஒன்று கூடியிருப்பது என்பது உலகக் கூச்சல், கொண்டாட்டங்கள் அல்லது வேறெந்த உலக நோக்கங்களுக்காகவும் அல்ல. மாறாக, இங்கு மாநாட்டின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆன்மீக சூழலில் தங்கி, தமது ஆன்மீகத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும், அறிவார்ந்த ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், தமது கொள்கை நிலைகளை மேம்படுத்திக் கொள்வதற்காகவுமே நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம். மேலும், நமது செயல் நிலைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், அல்லாஹ்வின் அச்சத்தை மேற்கொள்வதற்கும், அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதற்காகவும் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளோம்.

அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள் எவை? அவனது படைப்பினங்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகள் எவை? என்பது எமக்கு தெரியாது என அஹ்மதி அல்லாத ஒருவர் கூறலாம். ஆனால், ஓர் அஹ்மதி அப்படி கூற முடியாது. நம்முன் மீண்டும் மீண்டும் அவை எடுத்துரைக்கப்படுகின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு ஒரு பேருபகாரம் செய்துள்ளார்கள். அதாவது அன்னார் அது தொடர்பாக முடிவடையாத கருவூலம் ஒன்றை நமக்கு தந்துள்ளார்கள். அன்னாரின் ஒரு கூற்றை நான் ஏற்கனவே கேட்டுள்ளேன்; படித்துள்ளேன் என சிலமுறை மனிதன் நினைக்கிறான். ஆனால், மனிதன் மீண்டும் அதை படிக்கும்போது, கேட்கும் போது ஏதாவதொரு புதிய கருத்து அல்லது ஒரு புதிய அம்சம் அவருக்குக் கிடைத்து விடுகின்றது.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தின் கீழ் வருகின்ற அஹ்மதி ஒருவருக்கு பைஅத் நிபந்தனைகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த உரிமைகள் குறித்து சுருக்கமாக எடுத்துக் கூறி விட்டார்கள். இந்த மாநாட்டில் நாம் கலந்து கொள்வதன் அசல் நோக்கம் என்ன? என்பதை நாம் எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். தற்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களை எடுத்துரைப்பேன்.

கொள்கையின் தாக்கம் செயல்களின் மீதும் ஏற்படுகின்றது என்பதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''இஸ்லாத்தில் இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, இறைவனுக்கு எவரையும் இணையாக்கக் கூடாது என்பதாகும். அவனது பேருபகாரங்களுக்குப் பகரமாக அவனுக்கு முழுமையாகக் கட்டுப்படுதல் என்பதாகும். கருணையாளன் மற்றும் பரிபாலிக்கக்கூடிய இறைவனை விட்டு முகந் திருப்பிக் கொண்டவர் ஷய்த்தான் ஆவார்.'' அல்லாஹ்வின் எத்துணை பேருபகாரங்கள் நம்மீது இருக்கின்றன. அவ்வாறிருந்தும் எவர் அல்லாஹ்வின் கூற்றை ஏற்றுக் கொள்வதில்லையோ அவனுக்கு முழுமையாக கட்டுபடுவதில்லையோ அவர் ரஹ்மானின் அடியாராக இருக்க முடியாது. அவர் ஷய்த்தான் ஆவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''அடுத்து இரண்டாவது அம்சம் என்னவென்றால், படைப்பினங்களுக்குரிய உரிமைகளைக் கண்டறிந்து முடிந்தவரை முழுமையாக அதனை நிறைவேற்றுவதாகும்.''

எந்த சமுதாயங்கள் பெரிய பெரிய பாவங்களைச் செய்தனவோ உதாரணமாக விபச்சாரம், திருட்டு, புறம் பேசுதல், பொய் போன்ற பாவங்களைச் செய்தனவோ அவை இறுதியில் அழிந்து விட்டன. இன்னும் சில சமுதாயங்கள் ஒரேயொரு பாவத்தைச் செய்ததனால் அழிந்து போயின. ஆனால் முஸ்லிம் சமுதாயம் கருணைக்குரிய சமுதாயம் ஆகும். அதன் மீது அல்லாஹ்வின் சிறப்பான பார்வை உள்ளது. எனவேதான் அல்லாஹ் அதனை அழிக்கவில்லை. அவ்வாறில்லையென்றால் இந்த முஸ்லிம் சமுதாயம் செய்யாத பாவம் என்னதான் உள்ளது? இன்று முஸ்லிம்களிடம் காணப்படாத பாவமே இல்லையே!

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ''ஒவ்வொருவரும் தனித்தனி கடவுள்களை உருவாக்கியுள்ளனர். ஒரு கடவுள் அல்ல. உலக இச்சைகளில் வீழ்ந்து விட்டனர். உலகவாதிகளை தமது இறைவனாக்கிக் கொண்டனர்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''அசல் விஷயம் என்னவென்றால் கொள்கை நல்லதாக இருந்தால் மனிதனிடம் நல்ல செயல்களும் வெளிப்படும்.''

அவர்கள் கூறுகின்றார்கள்: “எந்த மனிதன் உண்மையான குறைகளற்ற கொள்கையை மேற்கொள்வாரோ, மேலும் இறைவனுக்கு எவரையும் இணையாக்க மாட்டாரோ அவரிடமிருந்து தானாகவே நல்ல செயல்கள் வெளிப்படும்.”

முஸ்லிம்கள் உண்மையான கொள்கையை விட்டு விட்டதன் விளைவால்தான் அவர்கள் தஜ்ஜாலை இறைவனாக்கிக் கொண்டார்கள். முழு உலகிலும் நாம் பார்க்கின்றோம். பெரும் பெரும் அரசாங்கங்கள் கூட உலக சக்திகளை இறைவனாக்கிக் கொண்டன. அவைகளின் மடியில் விழுந்து விட்டன. இந்தக் காட்சி இன்று எல்லா இடங்களிலும் தென்படுகின்றன. தனி நபரிலிருந்து முஸ்லிம் அரசாங்கங்கள் வரை இதுவே நிலைமையாகும். ஏனெனில், தஜ்ஜாலிடம் அனைத்து இறை பண்புகளும் இருப்பதாக அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: “முஸ்லிம்கள் இறை பண்புகள் அனைத்தையும் தஜ்ஜாலிற்குக் கொடுத்துள்ளனர். கொள்கைகள் சரியாக இருப்பதுபோன்று செயல்களும் சரியானதாக இருக்க வேண்டுமென இறைவன் விரும்புகிறான். அதில் எவ்வகை குழப்பமும் இருத்தல் கூடாது. எனவேதான் சிராத்தே முஸ்தகீம் – நேர்வழியில் நிலைபெறுவது அவசியமாகும்.”

அன்னார் கூறுகின்றார்கள்: “அல்கய்ரு குல்லுஹும் பில் குர்ஆன் (எல்லா நன்மைகளும் குர்ஆனில் இருக்கின்றது) என இறைவன் என்னிடம் மீண்டும் மீண்டும் கூறினான். இறைவன் ஏகன் ஆவான். அவனுக்கு இணையில்லை என்பது அந்த குர்ஆனின் போதனையாகும். திருக்குர்ஆன் கூறியது முற்றிலும் உண்மையாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 420-421; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அனைத்து நன்மைகளையும் குர்ஆனில் தேடுங்கள். மேலும் அல்லாஹ்வை வணங்குங்கள். அவனுக்குரிய உரிமைகளைச் செலுத்துங்கள். அடியார்களுக்கு உரிய உரிமைகளையும் செலுத்துங்கள்.”

எனவே, இறைவனை ஏகன் என்றும் அவனுக்கு எதுவும் இணையில்லை எனக் கருதுவதும், அவனுக்கு முழுமையாக கட்டுப்படுவதும், அவனுக்குரிய உரிமைகளை வழங்குவதும் அவசியமாகும். அதன் அளவுகோல் என்னவென்றால் அவனது இறைவணக்கத்திற்குரிய உரிமைகளையும் செலுத்த வேண்டும்.

ஆக, இந்த விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “இந்த அமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கமே இறை ஞானத்தைப் பெறுவதுதான்.”

நாம் ஏன் அஹ்மதி ஆனோம்? அன்னாரிடம் பைஅத் செய்ததன் நோக்கம் என்ன? அன்னார் ஏன் இந்த அமைப்பை நிறுவினார்கள்? அதற்கு அன்னார் கூறுகின்றார்கள்: “இறை ஞானம் கிடைக்கப் பெறவும், துஆ மற்றும் உண்மையான இறை வணக்கத்தின் ஞானத்தைப் பெறுவதற்காகவும் இந்த அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.”

அன்னார் கூறுகின்றார்கள்: “துஆ மட்டுமே செய்து திட்டம் எதுவும் தீட்டாதவர் தவறிழைப்பவர் ஆவார். அதேபோன்று திட்டம் வகுப்பதை மட்டுமே போதுமானதெனக் கருதும் இரண்டாம் நபர் மார்க்கத்தை விட்டு வெளியேறியவர் ஆவார். ஒருவர் துஆ செய்கின்றார். ஆனால் முயற்சி செய்வதில்லை. திட்டம் வகுப்பதில்லை என்றால் அவரும் தவறிழைக்கிறார். ஏனென்றால் திட்டம் வகுத்துச் செயல்படும்படி அல்லாஹ் கட்டளை இட்டுள்ளான். அதே போன்று திட்டம் மட்டுமே வகுத்து துஆ செய்யாதவர் மார்க்கமற்றவராவார்.”

திட்டம் மற்றும் துஆ இரண்டையும் இணைப்பது இஸ்லாம் ஆகும். இஸ்லாத்தின் போதனை என்ன? திட்டம் வகுங்கள். முயற்சி செய்யுங்கள். தமது முழு ஆற்றல்களுடன் வலிமைகளுடன் உங்களால் இயன்ற உலகியல் முயற்சிகளைச் செய்யுங்கள். அதே போன்று துஆவும் செய்யுங்கள். அல்லாஹ்விடம் மன்றாடுங்கள். மேலும் அதிகமாக துஆ செய்யுங்கள். திட்டங்களின் விளைவை இறுதியில் இறைவனே வெளிப்படுத்த வேண்டும். இவ்விஷயங்கள் உள்ளதென்றால் இதுவே இஸ்லாமாகும் என்று அன்னார் கூறுகின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனவேதான், பாவம் மற்றும் கவனக்குறைவிலிருநது விலகுவதற்கு திட்டங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தும் வகையில் திட்டம் தீட்டுங்கள். துஆவிற்குரிய உரிமைகளைச் செலுத்தும் வகையில் துஆவும் செய்யுங்கள் என்று நான் கூறினேன்.

இந்த இரண்டு விஷயத்தைக் கருத்தில் வைத்தவாறு திருக்குர்ஆனின் முதல் சூராவான சூரா ஃபாத்திஹாவில் அல்லாஹ் இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஃதயீன் என வேண்டும்படி கூறுகிறான். திட்டத்தை மையமாக வைத்தே இறைவன் கூறியுள்ளான். மனிதன் முதலில் திட்டம் மற்றும் காரணிகளுக்குரிய உரிமைகளை வழங்க வேண்டும் என்பதற்காக நாங்கள் உன்னையே வணங்குகின்றோம் என்பதை முன்னிலைப்படுத்தியுள்ளான். ஆனால் அதே சமயம் துஆவின் அம்சத்தை மனிதன் கை விட்டு விடக் கூடாது. மாறாக திட்டங்களுடன் துஆவையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: நாங்கள் உன்னையே வணங்குகிறோம் என நம்பிக்கையாளர் கூறியவுடன் அவரது உள்ளத்தில் அல்லாஹ் வணங்க நான் யார்? அவனது அருளும் கருணையும் இல்லையென்றால் என்னால் எப்படி அவனை வணங்க முடியும்? என்ற எண்ணம் எழுகின்றது. நாம் பெரிய தொழுகையாளி ஆவோம். அதிகமாக தொழக் கூடியவர்களாவோம் என்ற எண்ணம், பெருமை சில நபர்களுக்கு தம்மைக் குறித்து உள்ளது. ஆனால் அது அல்லாஹ்வின் அருளாகும். இறை வணக்கத்திற்கு பாக்கியம் கிடைப்பது அல்லாஹ்வின் அருளாகும் என்றே உண்மையான நம்பிக்கையாளர் ஒருவர் எண்ணம் கொள்வார். எனவேதான் அவர் உடனடியாக இய்யாக்க நஸ்தயீன் உதவியும் கூட உன்னிடமே வேண்டுகிறேன் எனக் கூறுகின்றார். இது ஒரு நுட்பமான விஷயமாகும். இதனை இஸ்லாம் தவிர்த்து வேறெந்த மார்க்கமும் புரியவில்லை. இஸ்லாம் மட்டுமே அந்த கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது.

இஸ்லாத்தில் நுழைபவர் திட்டம் வகுப்பதையும், கஷ்டங்களுகாக துஆ செய்வதையும் உறுதியாகப் பிடித்து கொள்வது இஸ்லாத்திற்கு அவசியமாகும். இந்த இரண்டு தராசுத் தட்டுகளில் ஒன்று பலவீனமானதாக இருந்தாலும் பணி கெட்டு விடும். எனவே இதன்படி செயல்படுவது ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் கடமையாகும்.

இக்காலத்தில் நான் மக்களை இவ்வாறு காண்கிறேன். அவர்கள் திட்டங்கள் வகுக்கின்றனர். ஆனால் துஆ செய்வதில் கவனக் குறைவாக இருக்கின்றனர். சிலை வணக்கம் எந்த அளவுக்கு அதிகரித்து விட்டதென்றால் திட்டங்களை இறைவனாக்கி விட்டனர். துஆ செய்வதை நகைக்கின்றனர். மேலும் அது ஒரு வீணான காரியம் என எண்ணுகின்றனர். ஐரோப்பாவைப் பின்பற்றியதன் விளைவாகவே இந்த அனைத்து தாக்கமும் ஏற்பட்டுள்ளது. இது மிகக் கொடிய விஷம் ஆகும். அது உலகில் வேகமாகப் பரவி வருகிறது. இங்கு இப்போது ஐரோப்பாவில் அல்லாஹ்வின் மீதான ஈமான் பெருமளவில் குறைந்து வருகிறது. நாத்திகர் (Ethist) எண்ணிக்கையில் அதிகரித்து வருகின்றனர். அவர்களின் முன்னேற்றத்தின் இரகசியம் இதிலேயே அடங்கியிருப்பதாக முஸ்லிம்கள் கருதுகின்றனர். ஆனால் அதன் முடிவு நல்லதாக இருக்கப் போவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: “உலகில் பரவும் இந்த எண்ணம் மிகக் கொடிய விஷம் ஆகும். அந்த விஷத்தை அகற்றுவதை இறைவன் விரும்புகின்றான். அதன் காரணமாகவே அவன் இந்த அமைப்பை நிறுவியுள்ளான்.”

எனவே, அஹ்மதிகள் உலகின் தாக்கத்திற்கு ஆளாகக் கூடாது. உலகியலின் தாக்கத்தை ஏற்கக் கூடாது. இறைவனின் மீது நம்பிக்கை கொள்ளாதவரின் தாக்கத்தை ஏற்கக் கூடாது. மாறாக, அவர்கள் இறை இருப்பை அறியும்படி செய்ய வேண்டும். உண்மையான இஸ்லாத்தைப் பற்றி அவர்களிடம் கூற வேண்டும். இதுவே ஓர் அஹ்மதியின் பணியாகும். “ஏனென்றால், அதன் மூலம் உலகிற்கு இறைஞானம் கிடைக்க வேண்டும். துஆவின் உண்மைத்துவம் பற்றியும் அதன் தாக்கத்தைப் பற்றியும் உலகம் அறிந்து கொள்ள வேண்டும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 268-269; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) துஆவிற்கு எந்த உண்மைத்துவமும் இல்லை என மக்கள் நினைக்கின்றனர். அஹ்மதிகளுக்கு எங்கு துஆ ஒப்புக் கொள்ளப்படுதலின் மீது நம்பிக்கையிருக்க வேண்டுமோ அங்கு அதில் அவருக்கு அனுபவமும் இருக்க வேண்டும். ஓர் அஹ்மதி இந்நிலையை தன்னிடம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்நிலையில்

மட்டுமே கொள்கையில் உறுதிப்பாடு ஏற்படும். மனிதன் பொய்க்கடவுளின் பின் செல்ல மாட்டான். மாறாக, உண்மையான இறைவனைக் கண்டறிந்து அவனுக்கு முன்பு மட்டுமே குனிவான். அந்த உண்மையான இறைவனைக் கண்டறிதல் மற்றும் அல்லாஹ்வை வணங்குவதின் உச்சநிலை பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்மீது இறங்கிய வேதம் மற்றும் தனது செயல் மூலம் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். எனவே, நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளாதவரை இறைஞானத்தின் உண்மைத்துவம் வெளிப்படாது.

ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வருகையின் நோக்கம் மற்றும் ஜமாஅத்தை நிறுவியதன் நோக்கத்தை விளக்கியவாறு ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: ''நமது ஜமாஅத்தில் அறியாத எவரும் இருந்தால் அவர் இனி அறிந்து கொள்ளட்டும். இந்த அமைப்பை அல்லாஹ் உருக்கியதன் நோக்கம் என்ன? நமது ஜமாஅத் என்ன செய்ய வேண்டும்? என்பதை அறியாத ஒருவர் இருந்தால் அறிந்து கொள்ளட்டும். வெறும் சடங்காக பைஅத்தில் இணைந்து விடுவதே இரட்சிப்பு என்று கருதுவதும் தவறாகும். எனவே இறைவன் என்ன விரும்புகின்றான்? அதன் அசல் நோக்கம் என்ன? என்பதைக் கூறுவது அவசியமாகி விட்டது. வெறும் பைஅத் செய்து விடுவதால் இரட்சிப்பு கிடைத்து விடாது. இறைவன் என்ன விரும்புகின்றான்? என்பதை நான் உங்களுக்கு கூறுகின்றேன். அனைவரும் நினைவில் கொள்ளுங்கள். வெறும் சடங்கிற்காக பைஅத்தில் இணைந்து விடுவதோ அல்லது என்னை இமாமாகக் கருதுவது மட்டுமோ இரட்சிப்பிற்கு ஒருபோதும் போதுமானதல்ல. ஏனெனில் அல்லாஹ் உள்ளங்களைப் பார்க்கின்றான். அவன் வாய் வார்த்தைகளைப் பார்ப்பதில்லை. அல்லாஹ் மீண்டும் மீண்டும் கூறியது போன்று இரட்சிப்பிற்கு அவசியமான பொருளில் அல்லாஹ்வை ஏகனாகவும், அவனுக்கு எதுவும் இணையில்லை என்றும் கருத வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையான நபியாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் திருக்குர்ஆனை இறை வேதமாக நம்ப வேண்டும். கியாமத் வரை திருக்குர்ஆனிற்குப் பிறகு இனி எந்த வேதமும் வராது. அதாவது திருக்குர்ஆனைத் தவிர்த்து இனியொரு வேதத்திற்கான அவசியமில்லை. பாருங்கள்! நன்றாக நினைவில் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியா ஆவார்கள். நமது நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு இனி எந்த ஒரு புதிய ஷரீஅத்தும் வராது. எந்தக் கட்டளைகளும் இறங்காது. இந்த வேதமும் அதன் கட்டளைகளும் மட்டுமே நிலைபெற்றிருக்கும்.''

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ''எனது புத்தகங்களில் என்னைப் பற்றி காணப்படுகின்ற நபி அல்லது ரஸூல் என்ற வார்த்தைகளின் நோக்கம் புதிய ஷரீஅத்தையோ அல்லது புதிய கட்டளைகளையோ கற்றுக் கொடுப்பது ஒருபோதும் அல்ல. மாறாக, அதன் நோக்கம் என்னவென்றால் அல்லாஹ் உண்மையான தேவையின்போது ஒருவரை அனுப்பும்போது அவருக்கு இறைவனுடன் பேசுவதற்கான அந்தஸ்தை வழங்குகின்றான். அதன் காரணமாக அவருக்கு நபி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அந்த தூதர் நபி பட்டத்தை பெறுகின்றார். அவர் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வந்துள்ளார் என்பது ஒருபோதும் அதன் பொருள் கிடையாது. அல்லது அவர் (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஷரீஅத்தை ரத்து செய்கின்றார் என்பதும் பொருளல்ல. மாறாக, அவருக்கு என்னவெல்லாம் அருளப்படுகிறதோ அவை அனைத்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி நடந்ததன் விளைவாகவே அருளப்பட்டதாகும். அதைத் தவிர்த்து அவருக்கு எதுவும் கிடைக்கவும் முடியாது.

பாவங்கள் மிகுதியாக நடக்கும் காலத்தில் உலகவாசிகள் ஈமானின் உண்மைத்துவத்தை உணராத போதும், அவர்களிடம் எலும்பு மட்டுமே எஞ்சியிருந்து சதையும், சாறும் இல்லாமல் ஆகும்போது ஈமானிய நிலை பலவீனமாகி விடும். ஷய்த்தானிய ஆதிக்கம் மற்றும் வெற்றி அதிகரித்து விடும். ஈமானிய ஆர்வமும் இன்பமும் இருப்பதில்லை. அதுபோன்ற காலத்தில் இறைவனுக்கு உண்மையான முறையில் கட்டுப்படுதலில் தன்னை மாய்த்துக் கொண்ட ஒரு முழுமையான அடியாருக்கு தன்னுடன் உரையாடுவதற்கான கண்ணியத்தை வழங்கி உலகிற்கு அனுப்புவது தொடர்ந்து இருந்து வரும் அல்லாஹ்வின் தொடர் நடைமுறை ஆகும். இக்காலத்தில் அவன் என்னை தூதராக அனுப்பியுள்ளான். ஏனென்றால் இறை நேசம் முற்றிலும் குளிர்ந்துபோன காலக்கட்டம் இதுவே ஆகும். பொதுவான பார்வையில் மக்கள் லாயிலாஹ இல்லல்லாஹ என்பதையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களையும் நாவினால் ஒப்புக் கொள்வதைக் காண முடிகிறது. வெளிப்படையில் தொழவும் செய்கின்றனர்; நோன்பும் நோற்கின்றனர். அசல் விஷயம் என்னவெனில், ஆன்மீகம் முற்றிலும் எஞ்சி இருக்கவில்லை. மற்றொரு பக்கம் நற்செயல்கள் அதற்குரிய வகையில் செய்யப்படவில்லை என்பதற்கு அவர்களின் அமல்களே அவர்களுக்கு எதிராக சாட்சி பகர்கின்றன. என்ன அமல்கள் செய்யப்படுகின்றனவோ அவை நற்செயல்களுக்கு எதிரானதாகவே உள்ளன. முஸ்லிம்கள் அனைவரின் ஒன்றுபட்ட நிலை இவ்வாறே காட்சி அளிக்கின்றனது. மாறாக சடங்கு சம்பிரதாயமாகவே அமல்கள் செய்யப்படு – கின்றன. சில பணிகள் செய்யப்பட்டாலும் கூட வெறும் பழக்கதோசமாக சம்பிரதாயத்திற்காகவே செய்கின்றனர். அந்த அமல்களில் உயிரோட்டம் மற்றும் உண்மைத்துவத்திற்கான அறிவு அவர்களுக்கு இல்லை. ஏனென்றால், அவர்களிடம் பற்றும் ஆன்மீகத்தின் ஒளியும் இல்லை. அவ்வாறிலையென்றால் அந்த நற்செயல் –களுக்கான பரக்கத்துகளும் ஒளிகளும் ஏன் வெளிப்படவில்லை? நற்செயல்களின் உண்மைத்துவத்தைப் புரிந்து செய்யப்பட்டால் இறை திருப்திக்காக மட்டுமே செய்யப்பட்டால் அதற்கான விளைவுகளும் வெளிப்பட வேண்டும். அதற்கான பரக்கத்துகள் தென்பட வேண்டும்.

அன்னார் தொடர்ந்து கூறுகின்றார்கள்: நன்றாக நினைவில் கொள்ளுங்கள். உண்மையான உள்ளத்துடன் ஆன்மீக சிந்தனையுடன் அந்த அமல்கள் செய்யப்படாதவரை, அதனால் எந்தப் பயனும் கிடைக்காது. அந்த அமல்களால் எந்த உபயோகமும் இல்லை. எந்தக் குழப்பமும் இல்லாத செயல்களே நற்செயல்கள் எனக் கூறப்படும். குழப்பங்களிலிருந்து முற்றிலும் விலகியவரும், தூய்மையானவருமே சாலிஹ் – நல்லடியாராக இருக்க முடியும். எவர்களின் தொழுகைகளில் குழப்பம் இருக்குமோ, மேலும் மன இச்சைகள் ஒளித்திருக்குமோ அவர்களின் தொழுகைகள் அல்லாஹ்விற்கான தொழுகைகளாக ஒருபோதும் இருக்க முடியாது. அந்த தொழுகைகள் பூமியை விட்டு ஒரு அங்குலம் கூட உயர செய்வதில்லை. ஏனென்றால் அதில் தூய பற்றின் உயிரோட்டம் இல்லை. மேலும் அவை ஆன்மீகத்தை விட்டு முற்றிலும் காலியாக உள்ளன.

ஏராளமான மக்கள் இந்த அமைப்பிற்கான அவசியம் என்ன வந்துவிட்டது? என ஆட்சேபனை செய்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றி புதிய ஜமாஅத்தை ஏற்படுத்தி விட்டார்கள். அதற்கான அவசியம் என்ன வந்து விட்டது? நாங்கள் தொழவில்லையோ நோன்பு நோற்கவில்லையா? எனக் கேட்கின்றனர். அந்த மக்கள் இவ்வாறு தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கின்றனர். ஜமாஅத்தைச் சார்ந்த விவரம் அறியாத மக்கள் இதுபோன்ற விஷயங்களைச் செவியுற்று ஏமாற்றத்திற்குள்ளாகி விட்டால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. நாங்கள் தொழுகிறோம்; நோன்பும் நோற்கிறோம்; இறை தியானமும் செய்கிறோம். அவ்வாறிருக்கும்போது இந்த பிரிவினை ஏன் செய்யப்பட்டது? புதிய ஜமாஅத்தை ஏற்படுத்தி விட்டார்கள் என்று அவர்கள் கருதுகின்றனர். நினைவில் கொள்ளுங்கள். இவ்வாறு கூறுவது குறைமதி மற்றும் இறை ஞானம் இல்லாததன் விளைவாகும். நான் சுயமாக எதையும் செய்யவில்லை. பிரிவினை ஏற்படுத்தப்பட்டிருந்தால் அல்லாஹ்வே ஏற்படுத்தியுள்ளான். ஜமாஅத்தை நான் நிறுவவில்லை. அல்லாஹ்வே ஜமாஅத்தை நிறுவும்படி என்னிடம் கூறினான். அவனே இந்த ஜமாஅத்தை உருவாக்கியும் உள்ளான். பிரிவினை ஏற்படுத்தியதாக நீங்கள் என்னை குறை கூறுகின்றீர்கள் என்றால் அதற்கு அல்லாஹ்வே பொறுப்பாவான்; நான் பொறுப்பு அல்ல. இந்த ஜமாஅத்தை நிறுவியது அல்லாஹ்வே ஆவான். எனவே, ஜமாஅத்தை ஏன் ஏற்படுத்தினாய்? என்று அவனிடமே கேளுங்கள். ஈமானில் ஆற்றல்கள் குறைந்து குறைந்து நிலைமை எந்த அளவிற்கு வந்து விட்டது என்றால் ஈமானிய ஆற்றல்கள் முற்றிலும் செயலிழந்து விட்டன. இந்த அமைப்பைப்

பற்றி உண்மையான ஈமானின் ஆன்மாவை ஊதுவதற்கு இறைவன் நாடியுள்ளான். இதுபோன்ற நிலைகளில் அவர்களின் ஆட்சேபனைகள் அறிவீனமானதும் வீணானதும் ஆகும்.

எனவே, இதுபோன்ற சந்தேகங்கள் ஒருபோதும் எவரது உள்ளத்திலும் வரக் கூடாது. முழுமையாக சீர்தூக்கிப் பார்த்தால் இந்த சந்தேகங்கள் வரவே முடியாது. ஆழ்ந்து சிந்திக்காததன் விளைவாகவே சந்தேகங்கள் வருகின்றன. வெளிப்டையான நிலைமைகளைக் கண்டு இதுபோன்று ஏராளமான முஸ்லிம்கள் இருக்கின்றனரே என கூறி விடுகின்றனர். இதுபோன்ற சந்தேகங்களால் மனிதன் விரைவில் அழிவிற்குள்ளாகி விடுகிறான். நான் இதுபோன்ற சில மக்களின் கடிதங்களைப் பார்த்துள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு பைஅத் செய்த பிறகும் கூட இதுபோன்ற சிலரின் கடிதங்கள் வந்தன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: வெளிப்படையில் அவர்கள் நமது ஜமாஅத்தில்தான் இருக்கின்றனர். அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர். மற்ற முஸ்லிம்களும் நம்மைப் போன்றே தொழுகின்றனர்; நோன்பு நோற்கின்றனர்; கலிமா கூறுகின்றனர்; நன்மைகள் செய்கின்றனர்; அவர்களும் நல்லவர்களாகவே திகழ்கின்றனர். அவ்வாறிருக்க இந்த புதிய ஜமாஅத்திற்கான தேவை என்ன வந்து விட்டது? எனக் கேட்கின்றனர். இந்த மக்கள் வெளிப்படையில் நமது பைஅத்தில் இணைந்துள்ளனர். ஆயினும், இதுபோன்ற சந்தேகங்கள் மற்றும் ஆட்சேபனைகளைக் கேட்டு விட்டு எங்களுக்கு பதில் அளிக்கத் தெரியவில்லை எனக் கூறுகின்றனர். இதுபோன்ற கடிதங்களைப் படித்து அப்படிப்பட்ட மக்களின் மீது வேதனையும் கருணையும் ஏற்படுகிறது. அதுபோன்ற நபர்கள், எமது அசல் நோக்கம் மற்றும் விருப்பத்தைப் புரியவே இல்லை. அவர்கள் சடங்கு சம்பிரதாயமாக இஸ்லாத்தின் கடமைகளை நம்மைப் போன்று செய்வதையும், இறை கட்டளைகளை ஆற்றுவதையும் பார்க்கின்றனர். உண்மையான உயிரோட்டம் அவர்களிடம் இருப்பதில்லை. இந்த சந்தேகம் விஷத்தைப் போன்று செயல்படுகின்றது. நாம் மனிதனை பாவத்தின் மரணத்திலிருந்து பாதுகாக்கும் உண்மையான அமைதியை ஏற்படுத்த விரும்புவதை அந்த தருணத்தில் அவர்கள் சிந்திப்பதில்லை. சடங்கு சம்பிரதாயங்களைச் செயல்படுத்தும் அம்மக்களிடம் இவ்விஷயங்கள் இல்லை. அவர்களின் பார்வை வெளித் தோற்றத்தின் மீதே உள்ளது. உண்மை நிலையை அவர்கள் காண்பதில்லை. அவர்களின் கரங்களில் தோல்களே உள்ளன. அதில் எந்தச் சத்தும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 235-239; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே அன்னாரின் வருகையின் நோக்கம் என்பது அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்துவதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மகத்துவத்தை அடையாளம் காட்டிக் கொடுப்பதும், திருக்குர்ஆனின் ஆட்சியை நம் மீது செயல்படுத்துவதுமாக இருக்கும்போது அன்னாரை ஏற்றுக் கொண்ட நாம் நமது கொள்கை மற்றும் செயல் நிலையை அதற்கேற்ப ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வெளித்தோற்றத்தை மட்டும் பார்ப்பது போதுமானதன்று. மற்ற முஸ்லிம்களும் நம்மைப் போன்றே தொழுகின்றனர்; நோன்பு நோற்கின்றனர். நமக்கும் அவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்ற எண்ணம் இருக்கும் என்றால், வித்தியாசம் ஏதும் தென்படவில்லை என்றால் நாம் கவலைப்பட வேண்டும். வித்தியாசம் கண்டிப்பாக இருக்க வேண்டும். நமது இறை வணக்கங்களில், நமது தொழுகைகளில் இறை தியானங்களில், நமது படைப்பின சேவையில் ஒரு உள்ளார்ந்த உத்வேகமும் உயிரோட்டமும் இருக்க வேண்டும். அது மற்றவர்களிடம் தென்படுவதில்லை. நமது பைஅத் உண்மையான வடிவத்தைப் பெற்றுள்ளதா? அல்லது வெறும் வாய்ப் பேச்சுக்கள் மட்டுமா? என்று ஆராய வேண்டும். அல்லாஹ்வை லா ஷரீகலஹு எனப் புரிந்தவண்ணம் நமது இறை வணக்கங்கள் இருக்கின்றவா? இல்லையா? என்று பார்க்க வேண்டும்.

ஏராளமானோர் ஐவேளை தொழுகைகளை தொழவும் செய்கின்றனர். ஆயினும் உருக்கத்துடன் தொழுவதில்லை. அஹ்மதிகளிலும் பலர் உள்ளனர். அவர்கள் ஐவேளை தொழுகைகளைக் கூட தொழுவது கிடையாது. என்னை சந்திக்கும் தருணத்தில் நாங்கள் தொழுவதற்காக துஆ செய்யுங்கள் எனக் கூறுகின்றனர். உண்மையில்

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்-றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்-களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் (அல்லாஹ்வின் அடியார்களாகிய) அவர்கள் செலவு செய்யும்போது வீண் விரயம் செய்யவோ, கருமித்தனம் காட்டவோ செய்யாமல் அவ்விரண்டுக்கும் இடையில் நடுநிலையைக் கைக்கொள்வார்கள். (25:68)

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.


93600 05888
78716 00664

IBR
Construction Materials



எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.


### திருக்குர்ஆனிலிருந்து...

(நிராகரிப்பவர்களிடம்) கூறுவீராக: நீங்கள் பிரார்த்தனை செய்யா விட்டால் என் இறைவன் உங்களைப் பொருட்படுத்தவே மாட்டான். நீங்கள் (இறைத் தூதை) மறுத்து விட்டதால் தண்டனை உங்களைப் பற்றிக் கொள்ளும். (25:78)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, கோயம்புத்தூர்.

### திருக்குர்ஆனிலிருந்து...

உங்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட்டால் அது உங்கள் கைகள் சம்பாதித்தவற்றி(ன் விளைவி)னாலே ஆகும். அவன் (உங்கள் பாவங்களுள்) அதிகமானவற்றை மன்னிக்கிறான். (42:31)

**S. முஹம்மது இஸ்மாயீல்**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்

### திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் எல்லாரும் முழுமையான கீழ்படிதலுக்குள் வந்து விடுங்கள். ஷய்த்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்லாதீர்கள். அவன் உண்மையிலேயே உங்களுக்கு (மிகவும்) பகிரங்கமான பகைவனாவான். (2:209)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மேலப்பாளையம்.

### திருக்குர்ஆனிலிருந்து...

மனிதன் நல்லதைக் கேட்பதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. ஆனால், அவனுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அவன் நம்பிக்கை இழந்து சோர்வடைந்து விடுகின்றான். (41:50)

**S.H. வஸீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்

இது அஹ்மதிகளின் மீது கடமையாக்கப்பட்டுள்ள ஓர் அடிப்படையான விஷயமாகும். இது ஒவ்வொரு நம்பிக்கையாளர் மற்றும் முஸ்லிமின் மீதும் கடமையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்த பிறகு உள்ளார்ந்த ஆர்வம் மற்றும் மகிழ்ச்சியுடன் தொழுகை தொழப்பட வேண்டும். தொழுகைகளை சரிவர நிறைவேற்றாமல் என்னிடம் வந்து, நாங்கள் தொழுவதற்கு துஆ செய்யுங்கள் எனக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. தொழவில்லை என்ற உணர்வு உங்களுக்கு இருந்தால் அதை சரி செய்வதற்காக உழைப்புடன் முயற்சி செய்ய வேண்டும். சுயமாக முயற்சியும் துஆவும் ஏன் செய்வதில்லை? இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்று கூறும்போது வெறும் வாயளவில் கூறக் கூடாது. இந்த சொற்களை உள்ளத்தின் ஆழத்திலிருந்து கூறியவாறு அதன்படி ஏன் செயல்படுவதில்லை? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை உண்மையான தூதர் என ஏற்றுக் கொண்டிருக்கும்போது, நமது ஒவ்வொரு செயலும் அன்னாரின் அழகிய முன்மாதிரிக்கேற்பவே இருக்க வேண்டும். இறை வணக்கங்களுடன் அன்னாரின் உயரிய நற்குணங்களையும் மேற்கொள்ள வேண்டும். சமூகத் தொடர்புகளும், குடும்பத் தொடர்புகளும் உள்ளன. மனைவிமார்களுடன் அன்னார் அழகிய முறையில் நடந்து கொண்டார்கள். நமக்காக முன்மாதிரியை அன்னார் வெளிப்படுத்தி–யுள்ளார்கள்.

ஆனால் பெரும்பாலார் குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். அவர்களின் உணர்வுகளைக் கருத்தில் கொள்வதற்கு அன்னார் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். பிள்ளைகளிடம் பரிவுடன் நடப்பதையும், பிறரின் உணர்வுகளை பொதுவாக கருத்தில் கொள்வதையும் நமக்கு அன்னார் கற்றுத் தந்துள்ளார்கள். சண்டை, சச்சரவுகளிலிருந்து விலகி நிற்பதற்கு அன்னார் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். தனது செயலினால் காட்டினார்கள். அமானிதத்தில் நம்பிக்கை மோசடி செய்யாமல் இருப்பதற்கு கவனமூட்டி நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். பணியையும், தாழ்மைக் குணத்தையும் நிலை நாட்டுவதற்கும் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். உண்மையின் உயர் தரத்தை நிலைநாட்ட நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். அன்னாரிடம் காணப்படாத மிகவும் மேலான நற்குணம் வேறு என்னதான் உள்ளது? நாம் உண்மையிலேயே அன்னாரை உண்மையான நபியாக ஏற்றுக் கொண்டிருந்தால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அன்னாரின் அடிமைத்துவத்தில் அனுப்பப்–பட்டிருப்பதாக நாம் நம்பினால் நாம் நமது செயல்களையும், இறை வணக்கங்களின் தரத்தையும் உயர்த்த வேண்டும். திருக்குர்ஆனின் கட்டளைகளை அடையாளம் கண்டு நாம் என்னென்ன நன்மைகளைச் செய்கின்றோம்? எதனையெல்லாம் நாம் செய்வதில்லை? மேலும் என்னென்ன தீமைகளைக் கை விட்டிருக்–கின்றோம்? எதனை கை விடவில்லை? என்று ஆராய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதம் மற்றும் அந்தஸ்தை சரியான பொருளில் அடையாளம் காண்பதும் அவசியமாகும். அல்லாஹ்விடமிருந்து விலக்கி தொலைவில் கொண்டு சென்ற இக்காலம் மேலும் முன்னேற்றம் என்ற பெயரில் விடிகின்ற ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொரு தினத்திலும் மேலும் நம்மை விலக்குவதற்கு புதிய முயற்சிகள் செய்யப்படு–கின்றன. தற்போது அல்லாஹ்வுடனான தொடர்பு மற்றும் இறை ஞானம் போன்றவற்றைப் பெறுவதற்கு முயற்சி செய்வது அஹ்மதிகளின் பண்பாகும். மேலும் உதயமாகும் ஒவ்வொரு நாளும் இறை ஞானத்தில் முன்னேற்றம் காணக் கூடியதாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடனான அன்பும், நேசமும் வெறும் வாயளவிலான வாதமாக மட்டும் இருக்கக் கூடாது. வெறும் முழக்கங்கள் மட்டும் செய்தால் போதுமானதல்ல. மாறாக, அன்னாரின் அழகிய முன்மாதிரியைப் பின்பற்றியவாறு அன்பை வெளிப்படுத்த வேண்டும். அன்னாரின் பெயரில் முழக்கங்களைச் செய்து விட்டு, அன்னாரின் பெயரிலேயே அநீதியும் இழைத்தல் கூடாது.

இன்றைய நாட்களில் முஸ்லிம்களின் நிலை இவ்வாறுதான் உள்ளது. நாம் பார்க்கின்றோம். ஏராளமான அமைப்புகள் உருவாகியுள்ளன. அரசாங்கங்களும், அமைப்புகளும் இஸ்லாம் மற்றும் நபி (ஸல்) அவர்களின் பெயரிலேயே அநீதி இழைக்கின்றனர். முழு உலகிற்கும் கருணையாகத் தோன்றிய அந்த ரஹ்மத்துல் லில் ஆலமீனை இவர்கள் தமது செயல்களால் அநீதிக்கான அடையாளமாக ஆக்கி விட்டனர். ஆனால் அவர்களின் இந்த முயற்சி வெற்றி பெறாது. எனவேதான் இக்காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் தோன்றியுள்ளார். இஸ்லாத்தின் அழகிய சித்திரத்தை உலகின் முன் எடுத்து வைப்பதற்காக நாம் முயற்சி செய்து வருகிறோம். எனவே அந்த அழகிய சித்திரத்தைக் காட்டுவதற்கு அன்னாரின் அனைத்து அழகிய முன்மாதிரிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் ஆட்சியை தம் மீது செயல்படுத்த முயல வேண்டும். மேலும் நமது ஒவ்வொரு செயலும் முழுமையான நற்செயலாகத் திகழ்வதற்கு எப்போதும் முயன்று கொண்டிருக்க வேண்டும். நான் ஒவ்வொது கணமும், அனு தினமும் ஷைத்தானிடமிருந்து விலகி நிற்பதற்கும் ரஹ்மானிற்க அருகில் செல்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இல்லையென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவது போன்று மற்றவர்களும் தொழுகின்றனர். ஆனால் அவர்களின் தொழுகைகள் பூமியிலேயே நின்று விடுகின்றது. விண்ணின் இறைவன் அதுபோன்ற தொழுகைகளை எந்த வகையிலும் பொருட்படுத்த மாட்டான். ஏனெனில் அவர்களிடம் தூய பற்று இல்லை. அவர்களிடம் உலகம் கலந்துள்ளது. அதுபோன்ற தொழுகைகள் அழிவிற்குரியதாகும். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த எச்சரிக்கை நம்மை சிந்திப்பதன் பக்கமும், கவலைப்படுவதன் பக்கமும் கவனமூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். அன்னாரின் பைஅத்தின் உண்மைத்துவத்தைப் புரியக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும்.

உண்மையான தொழுகை எது? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வுடன் உண்மையான தூய்மையான தொடர்பும் இருக்கும்போதுதான் தொழுகை உண்மையான தொழுகையாக இருக்க முடியும். அல்லாஹ்வின் திருப்தி மற்றும் கட்டுப்படுதலில் எந்த அளவுக்கு மாய்த்துக் கொள்ள வேண்டுமென்றால், எந்த அளவுக்கு உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்றால் அவனது வழியில் உயிரைக் கொடுப்பதற்கும் மரணிப்பதற்கும் தயாராகி விட வேண்டும். மனிதனிடம் இந்நிலை ஏற்பட்டு விடும்போது அவரது தொழுகை தொழுகையாகும் எனக் கூறப்படும். ஆனால் தொழுகையின் உண்மைத்துவம் மனிதனிடம் உருவாகாத வரை உண்மையான பற்று மற்றும் விசுவாசத்திற்கான முன்மாதிரியைக் காட்டாத வரை அவரது தொழுகையும், செயல்களும் தாக்கத்தை ஏற்படுத்தாது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: பலர் உள்ளனர். அவர்களை மக்கள் நம்பிக்கையாளர் என்றும், இறையச்சம் உடையவர் என்றும் கருதுகின்றனர். ஆனால் விண்ணில் அவர்களின் பெயர் காஃபிர் ஆகும். அந்த வகையில் விண்ணில் எவர் பெயர் முஃமினாக இருக்குமோ அவரே உண்மையில்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*என் கையில் ஒரு தீபம் உள்ளது. என்னிடம் வருபவர் அவ்வொளியிலிருந்து நிச்சயம் ஒளி பெறுவர். ஆனால் தவறான எண்ணத்தாலும் தீய யூகத்தாலும் விலகி ஓடுபவன் இருளில் எறியப்படுவான். இக்காலத்தின் உறுதி வாய்ந்த கோட்டை நானே....*

மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா
ஆதம்பாக்கம்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*திருக்குர்ஆனின் முக்கிய போதனைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஓரிறைக் கொள்கை, இறை அன்பும், இறைவனுக்கு கட்டுப்படுதலும் ஆகும். மற்றொன்று தன் உடன்பிறப்புகளுக்கும் அயலாருக்கும் இரக்கம் காட்டுதல் ஆகும்.*

மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.*

M.Y. கன்சுல் ஆயிஷா
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

முஃமின் ஆவார். உலகத்தின் பார்வையில் அவர் காஃபிர் என அழைக்கப்பட்டாலும் சரியே. உலகம் நம்மை காஃபிர் எனக் கூறுகிறது. நமக்கு அது பற்றி சற்றும் கவலையில்லை. நமது செயல்கள் நல்லது என்றால் நமக்கு இறைவனுடன் தொடர்பு உள்ளதென்றால் பின்னர் அல்லாஹ் நம்மை முஃமின் என்று கூறுகிறான்.

உண்மையிலேயே மனிதன் சரியான பொருளில் நம்பிக்கை கொள்வது மிகக் கடினமான விஷயமாகும். அல்லாஹ்விடம் முழுமையான நன்றியுணர்விற்கான முன்னுதாரணத்தைக் காட்டுவதும் கடினமாகும். மனிதன் உண்மையான நம்பிக்கை கொள்ளும்போது அதற்கு பல அடையாளங்கள் கூறப்படுகின்றன. திருக்குர்ஆனில் உண்மையான நம்பிக்கையாளரின் பல அடையாளங்கள் கூறப்பட்டுள்ளது. அது அவர்களிடம் தென்பட வேண்டும். அந்த அடையாளங்களில் உண்மையான ஈமானுக்குரிய ஒரு பெரும் அடையாளம் என்னவென்றால் உலகத்தை பாதங்களுக்குக் கீழே போட்டு நசுக்கி பாம்பு தனது புற்றிலிருந்து வெளி வருவதைப் போன்று வெளியேறி விடுவதாகும். அசல் நோக்கம் அல்லாஹ்வை திருப்திப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். அதே போன்று மனிதன் மன இச்சைகள் எனும் புற்றிலிருந்து வெளி வந்து விடும் போதுதான் அவர் முஃமினாக இருப்பார். முழுமையான ஈமானின் அடையாளங்கள் அவரிடம் காணப்படும்.

அல்லாஹ் கூறுகிறான்:

إِنَّ اللَّهَ مَعَ الَّذِينَ اتَّقَوا وَّالَّذِينَ هُم مُّحْسِنُونَ

நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்–களுடன் இருக்கின்றான். அவர்கள் இறையச்சத்தை விட்டு முன்னேறி பணி செய்கின்றனர். அவர்கள் நன்மை பயக்கும் மக்களாகத் திகழ்கின்றனர். **(16:129)** (மல்.ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 240-241; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அடுத்து உண்மையான நன்மை என்ன? என்பதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “தக்வாவின் பொருள் தீமையின் நுட்பமான வழிகளிலிருந்து விலகி நிற்பதாகும். நினைவில் கொள்ளுங்கள். ஒருவர் தன்னை நல்லவர் எனக் கூறுவது நன்மையல்ல. நான் எவருடைய செல்வத்தையும் அபகரிக்கவில்லை; திருடவில்லை; தீய பார்வை மற்றும் விபச்சாரம் செய்வதில்லை என்று கூறுவது நன்மையாகி விடாது. அதுபோன்ற நன்மைகள் இறை ஞானமுடையவரின் பார்வையில் நகைப்பிற்குரியதாகும். ஏனெனில் அவர் அந்த தீமைகளைச் செய்தால், திருடினால், கொள்ளை அடித்தால் தண்டனை பெறுவார். எனவே, இது ஒன்றும் நன்மையே அல்ல. இறை ஞானமிக்க ஒருவரின் பார்வையில் மதிக்கத்தக்கதும் அல்ல. அசல் மற்றும் உண்மையான நன்மை என்னவென்றால், மனித சமுதாயத்திற்கு தொண்டாற்ற வேண்டும். அல்லாஹ்வின் வழியில் முழுமையான உண்மை மற்றும் நன்றி உணர்வை வெளிப்படுத்த வேண்டும். அதற்காக நாம் உயிரையும் கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

அதன் காரணமாக தீமையை விட்டு விலகி நன்மைகளையும் செய்கின்ற மக்களுடன் அல்லாஹ் இருப்பதாகக் கூறுகின்றான். நன்றாக அறிந்து கொள்ளுங்கள். வெறும் தீமையிலிருந்து மட்டும் விலகி நிற்பது நன்மையல்ல. அத்துடன் நன்மைகளும் செய்யப்படுதல் வேண்டும். ஒருபோதும் விபச்சாரம் செய்யாத, கொலை செய்யாத, திருடாத, கொள்ளயடிக்காத ஏராளமான நபர்கள் உள்ளனர். அவ்வாறிருந்தும் அல்லாஹ்வின் வழியில் அவர்கள் எந்த உண்மையையும் நன்றியுணர்வையும் காட்டவில்லை அல்லது மனித சமுதாயத்திற்கு எந்த தொண்டும் செய்யவில்லை. இந்த விஷயங்களை மட்டும் முன்னிறுத்தி தம்மை நல்லவர்களின் கூட்டத்தில் இணைத்துக் கொள்ளும் மக்கள் அறிவிலிகள் ஆவார். ஏனென்றால் இவை அனைத்தும் தீய நடத்தைகள் ஆகும். இந்த எண்ணங்களால் மட்டும் இறை நேசர்களின் வட்டத்தில் வந்து விட முடியாது. திருடக் கூடியவர், தீய நடத்தை அல்லது நம்பிக்கை மோசடி செய்யக் கூடியவர், லஞ்சம் வாங்குபவர் தொடர்பான அல்லாஹ்வின் நடைமுறை என்னவென்றால், அவருக்கு இவ்வுலகிலேயே தண்டனை கொடுக்கப்படும். அந்த தண்டனையை பெறாத வரை அவர் மரணிப்பதில்லை. எனவே தீமையை விட்டு விலகி நிற்பது மட்டும் நன்மையல்ல.

தக்வா என்பது குறைந்த படித்தரமாகும். அதற்கு உதாரணம் இதுவாகும். தக்வா என்பது, உயர் தரமான உணவை வைப்பதற்காக ஒரு பாத்திரத்தை நன்றாக சுத்தப்படுத்துவது போன்றதாகும். ஒருவர் பாத்திரத்தை நன்றாக சுத்தப்படுத்தி வைத்து விட்டு அதில் உயர் தரமான உணவை வைக்கா விட்டால் அதனால் வயிறு நிரம்பி விடுமா? ஒருபோதும் இல்லை. வெறும் பாத்திரம் வயிறை நிரப்பி விடுமா? ஒருபோதும் இல்லை. அதே போன்று தக்வாவை புரிந்து கொள்ளுங்கள். தக்வா என்பது என்ன? தக்வா என்பது தீமையின் பக்கம் சாய்க்கும் ஆன்மா எனும் பாத்திரத்தை சுத்தப்படுத்துவது ஆகும்.” (மல்.ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 241-243; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஆன்மாவை சுத்தப்படுத்தி அதில் நற்செயல்கள் எனும் உயர்தர உணவை நிறைப்பதே மனிதனுக்கு இறை நெருக்கத்தைப் பெற்றுத் தரும். மேலும் அவனது திருப்தியைப் பெற்றுத் தரக் கூடியதாக அவனை ஆக்கி விடும். பெரும் பெரும் தீமைகளில் பாவங்களில் ஒன்று பொய் ஆகும். அதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

“நான் சீர்தூக்கிப் பார்த்தேன். திருக்குர்ஆனில் பல்லாயிரம் கட்டளைகள் உள்ளன. அதன்படி அமல் செய்யப்படுவதில்லை. சின்னஞ்சிறு விஷயங்களில் கூட அதற்கு எதிராக நடக்கின்றனர். எந்த அளவுக்கு என்றால் கடைக்காரர்கள் பொய் பேசுகின்றனர். சிலர் அழகுபடுத்திப் பொய் பேசுகின்றனர். ஆனால் இறைவனோ பொய்யை அசுத்தத்துடன் சேர்த்துள்ளான். ஆனால் ஏராளமான மக்கள் அழகுபடுத்தி சூழலை எடுத்துரைப்பதிலிருந்து விலகுவதில்லை. இதனை நாம் பார்க்கின்றோம். அதனை பாவமாகக் கூட கருதுவதில்லை. காமடிக்காக பொய் பேசுகின்றனர். பொய்யின்

**S. MABU**
87541 71700
81240 22479
90955 89992
78719 66352
**STAR ORGANIC**
**TERRACE GARDEN DIVISION**
- Panchagavya
- Pest Repeller
- See Veed Extract
- All kinds of garden tools

Email: Starorganicmabu@gmail.com
**THARPOLIN + POULTRY EQUIPMENTS SALES**
**TIRUNELVELI DIST.**

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

halal Grill house A/c
*multi cuisine family restaurant*
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

**திருக்குர்ஆனிலிருந்து...**

உம்முடைய இறைவன், தான் விரும்புபவருக்கு உணவைத் தாராளமாக வழங்குகின்றான். மேலும், (தான் விரும்புபவருக்கு அவற்றைக்) குறைவாகக் கொடுக்கின்றான். நிச்சயமாக, அவன் தன் அடியார்களை நன்கு அறிந்து கொள்பவனும், நன்கு பார்ப்பவனும் ஆவான். (17:31)

**முஹம்மது ஆதில்**

சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், சூலூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவன் தன் கரத்தினால் மண்ணில் விதைத்த விதையே. இறைவனின் இந்த விதை முளைக்கும்; பூக்கும்.... பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று கூறியுள்ளான்.

**அட்வகேட் ஸலீம் அஹ்மது**

மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

நீங்கள் அளந்து கொடுக்கும் போது, அளவை முழுமையாகக் கொடுங்கள். (நீங்கள் நிறுத்துக் கொடுத்தாலும்) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். இவ்வாறு செய்வது மிக்க நல்லதும், முடிவைப் பொருத்தவரை மிகச் சிறந்ததுமாகும். (17:36)

**M.Y. ஷாஹுல் ஹமீது**

மற்றும் குடும்பத்தினர், திருச்சி.

அனைத்து துறைகளிலிருந்தும் விலகாத வரை உண்மையாளராக முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 120; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ஓர் உயரிய நற்குணம் குறைகளை மறைத்தல் ஆகும். அது ஒரு நற்குணம் மட்டுமல்ல. அதன் மூலம் மனிதன் ஏராளமான சண்டை சச்சரவுகளிலிருந்து தப்பிக்கின்றன். உலகத்தையும் பிறரையும் காப்பாற்றுகின்றான்.

அது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நான் பார்க்கின்றேன். ஜமாஅத்தில் தங்களுக்கு இடையிலான சண்டை அதிகம் ஏற்படுகிறது. சிறிய சிறிய சச்சரவுகளில் ஒருவர் மற்றவரின் கண்ணியத்தின்மீது தாக்குதல் தொடுக்கின்றனர். சிறிய பகைமையே துவக்கத்தில் இருக்கும். அது அதிகரித்து அதிகரித்து ஒருவர் மற்றவரின் கண்ணியத்தின் மீது தாக்குதல் நடத்தத் துவங்கி விடுகின்றனர். தமது சகோதரருடன் சண்டையிடுகின்றனர். இது மிகவும் விரும்பதகாத செயலாகும். இது ஒருபோதும் நிகழக் கூடாது. ஒருவர் தனது தவறை ஒப்புக் கொண்டு விடுவதால் என்ன நிகழ்ந்துவிடப் போகிறது? இருவர் சண்டையிட்டால் அதில் ஒருவர் சமாதானம் ஏற்படும் வகையில் தனது தவறை ஒப்புக் கொள்ளட்டும். அதனால் என்ன குறைவு வந்து விடும்? சிலர் சிறு சிறு விஷயங்களில் பிறரை இழிவுபடுத்தாத வரை அவரை விட்டு விலகுவதில்லை. இதுபோன்ற விஷயங்களில் இருந்து விலகுவது கண்டிப்பானதாகும். இறைவனின் ஒரு பெயர் 'சத்தார்' ஆகும். அவ்வாறிருக்க இவர் ஏன் தனது சகோதரனின் மீது கருணை காட்டுவதில்லை? ஏன் மன்னித்தல் மற்றும் திரையிடுதல் போன்ற பணிகளை கைக் கொள்வதில்லை? தனது சகோதரரின் குறைகளை திரையிட வேண்டும். அவரின் கண்ணியம் மற்றும் கௌரவத்தின் மீது தாக்குதல் நடத்தக் கூடாது.

நான் ஒரு சிறிய புத்தகத்தில் படித்தேன். பழங்காலத்தில் ஓர் அரசர் குர்ஆனை எழுதி வந்தார். ஒரு முல்லா அதனை பார்த்து இந்த வசனம் தவறாக எழுதப்பட்டுள்ளது என ஆட்சேபித்தார். அரசர் அத்தருணத்தில் அந்த வசனத்தை வட்டமிட்டு இதை வெட்டி விடுவோம் என்று கூறி முடித்து விட்டார். அவர் சென்ற பிறகு அந்த வட்டத்தை அரசர் வெட்டி விட்டார். ஏன் இப்படி செய்தீர்கள் என கேட்கப்பட்டது. அதற்கு அரசர் கூறினார். என்னை சரி செய்ய வந்த முல்லாவே தவறிழைத்தார். நான் அப்போது அவரை ஆசுவாசபடுத்தவே வட்டம் போட்டேன். அவரின் தவறைப் பிடித்து தர்க்கம் செய்து அவரை வெட்கப்பட வைக்க நான் விரும்பவில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: "பிறரின் தவறைக் கண்டுபிடித்து அதனைப் பரப்புவது தற்பெருமையின் வேர் மற்றும் நோயாகும். இதுபோன்ற விஷயங்களால் ஆன்மா சீர்கெட்டு விடும். இதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும். சுருக்கமாக, இவை அனைத்தும் இறையச்சத்தில் அடங்கும். உள்ளார்ந்த மற்றும் வெளிப்புற விவகாரங்களில் இறையச்சத்தை மேற்கொள்பவர் வானவர்களின் கூட்டத்தில் சேர்க்கப்படுவார். ஏனென்றால், அவரிடம் எந்த வரம்பு மீறுதலும் எஞ்சியிருக்காது. தக்வாவைப் பெற்றுக் கொள்ளுங்கள். இறையச்சத்திற்கு பிறகே உலகில் பரக்கத்துகள் கிடைக்கும். இறையச்சமுடையவர் உலக ஆபத்துகளிலிருந்து பாதுகாக்கப்படுவார். இறைவன் அவர்களின் குறைகளின் மீது திரையிடுவான். இந்த வழிமுறையை மேற்கொள்ளாதவரை எந்தப் பயனுமில்லை. அதுவரை பைஅத்திலிருந்து எந்தப் பயனையும் பெற முடியாது. பயன் அடைந்தாலும் கூட ஒரு பகுதி இருளாகவே இருக்கும்.

அந்நியரிடம் காணப்படும் அதே மன உணர்ச்சியும், தற்பெருமையும், பகட்டும், கோபமும் உங்களிடம் எஞ்சியிருக்கும் என்றால் உங்களுக்கும் மற்றவருக்கும் என்ன வித்தியாசம் இருக்கும்? ஒரு கிராமத்தில் நல்லவர் ஒருவர் இருந்தாலும் கூட அற்புதங்களினால் தாக்கத்திற்குள்ளாவதைப் போன்று அவரின் தாக்கத்திற்கு மக்கள் ஆளாவர். அல்லாஹ்விற்கு அஞ்சி மனிதன் நன்மையைச் செய்யும்போது அவரிடம் ஒரு திகில் இருக்கும். இவர் இறை அடியார் என்ற எண்ணம் மக்களின் உள்ளங்களில் உருவாகி விடும். இறைவன் புறமிருந்து வருபவருக்கு இறைவன் தனது மகத்துவத்திலிருந்து பங்களிக்கின்றான். இதுவே நற்பாக்கியத்திற்கான வழிமுறையாகும்.

நினைவில் கொள்ளுங்கள். சின்னஞ்சிறு விஷயங்களில் சகோதரர்களுக்கு துன்பம் கொடுப்பது சரியல்ல. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அனைத்து நற்பண்புகளின் முழு வடிவம் ஆவார்கள். அன்னாரின் நற்பண்புகளையே அல்லாஹ் இறுதி முன்மாதிரியாக ஆக்கியுள்ளான். அன்னாரின் நற்குணங்களே அளவுகோலாக உள்ளது. இப்போதும் அதே மிருகத்தனம் எஞ்சியிருக்கும் என்றால் அது மிகவும் வேதனைக்குரிய மற்றும் துர்பாக்கியத்தனமாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மற்றும் அன்னாரின் உண்மைப் பேரன்பரிடம் பைஅத்திற்கான வாதம் செய்கின்றீர்கள் என்றால் ஒழுக்கங்களை சீர் செய்ய வேண்டும். பைஅத்திற்குப் பிறகும் அப்படியே இருந்தால், ஒருவர் மற்றவரின் கால்களை வாரிக் கொண்டிருந்தால், மிருகத்தனம் எஞ்சியிருந்தால், ஒருவர் மற்றவருக்கு பாதிப்பை ஏற்படுத்த முயன்றால் அது மிகவும் வேதனைக்குரிய நிலையும் துரதிஷ்டமும் ஆகும். பிறர் மீது பழி சுமத்தாதீர்கள். ஏனெனில், சில முறை பிறர் மீது குற்றஞ்சாட்டி தானும் அந்த குற்றத்தைச் செய்து விடுகிறான். அந்த குறை அவரிடத்தில் இருந்தால் அவரது விவகாரம் உள்ளபடியே அல்லாஹ்விடம் உள்ளது. பலரின் பழக்கம் எப்படியுள்ளதென்றால் அவசரப்பட்டு அசுத்தமான குற்றங்களைச் சுமத்தி விடுகின்றனர். இதிலிருந்து விலகி நில்லுங்கள். மனித இனத்திற்கு நன்மை செய்யுங்கள். உங்கள் சகோதரரிடம் அனுதாபம் காட்டுங்கள். அண்டை அயலாருடனும், சகோதரர்களுடனும் அழகிய முறையில் நடந்து கொள்ளுங்கள். எல்லாவற்றையும் விடுவதால் ஷிர்க்கிலிருந்து விலகி விடுங்கள். இதுவே இறையச்சத்திற்கான ஆரம்பப் படிக்கல் ஆகும்." (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 341-344; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

தனது சகோதரரின் குற்றத்தைப் பார்த்து என்ன செய்ய வேண்டும்? என்பது தொடர்பாக அன்னார் விவரிக்கின்றார்கள்: சமாதானம், தக்வா, நற்பாக்கியம் மற்றும் நல்லொழுக்க நிலைகளைச் சீர்செய்ய வேண்டும். எனது ஜமாஅத்தின் மீது எனக்கு வேதனை ஏற்படுகிறது. இன்னும் கூட சிறு சிறு விஷயங்களில் ஒருவர் மற்றவருடன் மோதிக் கொள்கின்றனர். பொது சபையில் ஒருவரை முட்டாள் என கூறுவது மாபெரும் தவறாகும். தனது ஒரு சகோதரரின் தவறைக் கண்டால் அவருக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவரை காப்பாற்றி விடட்டும் என துஆ செய்யுங்கள். அதை தவிர்த்து தவறைப் பகிரங்கப்படுத்தி விடாதீர்கள்.

ஒருவரின் மகன் தீய நடத்தை கொண்டவர் என்றால் அவர் பொது வெளியில் எதுவும் கூறுவதில்லை. மாறாக அவர் தனது பிள்ளைக்குத் தனிமையில் புரிய வைக்கின்றார். இது தீய வேலை இதை விட்டு விடு என்று கூறுவார். எனவே, மென்மை மற்றும் கருணையுடன் எவ்வாறு தமது பிள்ளைகளுடன் நடந்து கொள்கின்றீர்களோ, அதேபோன்று உங்கள் சகோதரர்களுக்கு இடையிலும் நடந்து கொள்ளுங்கள். ஒழுக்கம் சரியில்லாத நபரின் ஈமான் அபாயத்தில் இருப்பதாக நான் அஞ்சுகிறேன். ஏனென்றால் அதில் ஆணவத்திற்கான ஒரு வேர் உள்ளது. இறைவன் அவரிடம் திருப்தி அடையவில்லை என்றால் அவர் நாசமாகி விடுவார். எனவே அவரது சொந்த நிலை இப்படி இருக்கும்போது பிறருக்கு அதனை கூறுவதற்கு என்ன உரிமை அவருக்கு உள்ளது? அவர் தனது நஃப்ஸை மறந்து பிறரின் குறைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்பதே இதன் பொருள். பிறரின் குறைகளையே பார்த்துக் கொண்டு இருக்காதீர்கள். குறைகளைத் தேட வேண்டாம். ஏனென்றால் அதன்படி செயல்படுவதில்லை. அதன் விளைவாக இறுதியில் நீங்கள் செய்யாததை ஏன் பிறருக்கு கூறுகின்றீர்கள்? என்பதை அவர் உண்மைபடுத்தி விடுகிறார். (மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 368-369; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அடுத்து கோபப்படுபவர் வெற்றி மற்றும் உதவியில் இருந்து இழப்பிற்குரியவராக ஆகி விடுகிறார்.

இது தொடர்காக எடுத்துரைத்தவாறு அன்னார் கூறுகின்றார்கள்: "கடினமாக நடந்து சினம் கொள்ளும் நபரின் வாயிலிருந்து ஒருபோதும் இறைஞானம் மற்றும் நுட்பமான ஞானமிக்க விஷயங்கள் வெளிப்பட முடியாது. அப்படிப்பட்ட உள்ளம் நுட்பமான ஞானத்தைப் பெறுவதிலிருந்து இழப்பிற்குரியதாக ஆக்கப்படும். எவர் தனக்கெதிரில் இருக்கும் நபருடன் விரைவில் பொங்கி எழுந்து கட்டுப்பாட்டை இழந்து விடுவதால் மோசமான மூளை, கட்டுபாடற்ற உதடுகள் ஆகியவை நுட்பமான ஞானம் எனும் ஊற்றிலிருந்து விலக்கப்படும் என்பதை நினைவிற் கொள்ளட்டும். கோபமும் நுட்பமான ஞானமும்

ஓரிடத்தில் ஒன்று சேர முடியாது. கோபப்படுபவரின் அறிவு சிறியதாகவும், புரியும் திறன் மழுங்கியதாகவும் இருக்கும். கோபப்படுபவரின் அறிவு செயல் இழந்து விடும் . அவருக்கு ஒருபோதும் எந்த மைதானத்திலும் வெற்றியும் உதவியும் வழங்கப்படாது. கோபம் பாதி பைத்தியமாகும். இது அதிகரிக்கும்போது பின்னர் அவர் முழு பைத்தியமாகக் கூட ஆகி விடக் கூடும்.

நமது ஜமாஅத் விலக்கப்பட்ட அனைத்து விஷயங்களிலிருந்தும் விலகி நிற்க வேண்டும். மரத்துடன் தொடர்பில்லாத கிளை கனிகள் அற்றதாகவே ஆகி விடும். நீங்கள் எமது அசல் நோக்கத்தைப் புரியாமல், பைஅத்தின் படி செயல்படவில்லை என்றால், இறைவன் எனக்கு அளித்துள்ள வாக்குறுதிகளுக்கு நீங்கள் எப்படி வாரிசாக முடியும்?'' (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 127-128; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) வாக்குறுதிகளில் பங்கு பெற அன்னாரின் துஆக்களின் வாரிசாவதற்கு தீய பழக்கங்களைக் கை விட வேண்டும். இங்கும் கூட அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆவில் பங்கு பெற வேண்டி பலர் வருகின்றனர். ஆனால் செயல் நிலைகள் சரியில்லை என்றால் துஆவில் எவ்வாறு பங்கு பெற முடியும்?

கோபத்தைத் தவிர்த்து ஒரு நம்பிக்கையாளர் எந்த நிலையை அடைய வேண்டும்? இது பற்றி அன்னார் கூறுகின்றார்கள்: ''உங்களின் தற்போதைய கோபம் ஏதாவது சீர்கேட்டினை ஏற்படுத்தி விடக் கூடாது. அதன் மூலம் முழு ஜமாஅத்தும் அவப்பெயருக்கு ஆளாகி விடக் கூடாது. வழக்கு தொடரப்பட்டு அனைவருக்கும் பாதிப்பு ஏற்பட்டு விடக் கூடாது.'' நமது மாநாடுகளில் இளைஞர்களும் வருகின்றனர். அவர்களில் சிலர் சண்டையிட்டுக் கொள்கின்றனர். பழைய பகைமையைக் கொண்டு நடக்கின்றனர். இந்த விஷயங்கள் வெளி உலகிற்கு வரும்போது ஜமாஅத் அவப்பெயருக்கு ஆளாகிறது. ''எல்லா நபிமார்களும் ஏசப்பட்டிருக்கின்றனர். இது நபிமார்களின் சொத்தாகும். அவ்வாறிருக்க அதிலிருந்து நாம் எங்ஙனம் இழப்பிற்குரியவராக இருக்க முடியும்? கோபம் எனும் ஆற்றலே தரப்படாத மனிதராக நீங்கள் ஆகி விடுங்கள். அந்நியர்களிடம் கோபத்தைக் கண்டிப்பாக அடக்க வேண்டும். உங்களுக்கிடையில் முற்றிலும் ஒருவர் மற்றவர் மீது கோபப்படுகின்ற நிலையே இருக்க கூடாது. சிறிதளவு இருளின் பங்கிருந்தாலும் ஒளி வராது. இருளும் ஒளியும் ஒன்று சேர முடியாது. ஒளி வந்து விடும்போது இருள் எஞ்சியிருக்காது. நீங்கள் உங்கள் முழு ஆற்றல்களையும் அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதில் செயல்படுத்துங்கள். வெற்றிலை போடுபவர் அசுத்தமான பகுதியை வெட்டி வீசி விடுவதைப் போன்று உங்களின் அசுத்தமான பழக்கங்களைக் கண்டறிந்து தூக்கி எறிந்து விடுங்கள். உங்களை நீங்களே சீர்செய்து கொள்ளுங்கள். நன்மை செய்து பிறகு நன்மையுடன் தீமையை கலந்து விடாதீர்கள். தவ்பா செய்து கொண்டே இருங்கள். இஸ்திக்ஃபார் செய்யுங்கள். எப்போதும் துஆ செய்து கொண்டிருங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 128; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நாம் வெற்றி பெறுவதற்கான ஆயுதம் இஸ்திக்ஃபார், தவ்பா மற்றும் மார்க்க அறிவை பெற்றுப் கொள்வது, அல்லாஹ்வின் மகத்துவத்தை கருத்தில் கொள்வது, ஐவேளை தொழுகைகளைப் பேணுவது போன்றவை ஆகும். தொழுகை துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கான சாவி ஆகும். தொழும்போது அதில் துஆ செய்யுங்கள். கவனக் குறையுடன் இருக்காதீர்கள். இறைவனுக்குரிய உரிமைகளைச் செலுத்துவது தொடர்பான தீமைகளிலிருந்தும், படைப்பினங்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துவதில் நிகழும் தீமைகளிலிருந்தும் விலகி விடுங்கள்.(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 303; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) நாம் இந்த தரத்தைப் பெறுவதற்கு அல்லாஹ் நமக்கு பாக்கியம் வழங்குவானாக. அன்னாரின் பைஅத்தில் வந்த பிறகு அந்த பைஅத் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் நமது அனைத்து ஆற்றல்களையும் செலவிடுபவர்களாக நாம் திகழ்வோமாக. இதன் உண்மையை உலகிற்கும் அறிவிக்கும் மக்களாக நாம் திகழ்வோமாக.

மாநாட்டின் நாட்களில் இதையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, மாநாட்டின் நாட்களில் இங்கும் அங்கும் சுற்றித் திரிவதற்குப் பகரமாக நிகழ்ச்சிகளைக் கேளுங்கள். அனைத்து சொற்பொழிவுகளையும் கேளுங்கள். ஒவ்வொரு சொற்பொழிவும் ஏதாவதொரு வகையில் அறிவு, கொள்கை மற்றும் ஆன்மீக முன்னேற்றங்–களுக்கான காரணியாக இருக்கும். ஆகுமான காரணமின்றி மக்கள் வீணாக இங்குமங்கும் சுற்றித் திரியாமல் இருப்பதை தர்பிய்யத் துறை உறுதி செய்ய வேண்டும். மாநாட்டினைக் கேட்க வரவேண்டும். மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் டியூட்டி கொடுப்பவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்குங்கள். பார்கிங் மற்றும் ஸ்கேனிங் சமயத்தில் சிலமுறை பெரிய வரிசை இருக்கும். சாப்பாட்டு நேரத்திலும் சிலமுறை கஷ்டம் ஏற்படுவதுண்டு. அதே போன்று கழிப்பிடத்திலும் கூட சுத்தம் செய்வதற்கான தேவை ஏற்பட்டால் நீங்களே சுத்தம் செய்யுங்கள். டியூட்டி கொடுப்பவர் வந்துதான் சுத்தம் செய்ய வேண்டுமென காத்திருக்கக் கூடாது. சுத்தம் கூட ஈமானின் ஒரு பகுதியாகும். (சஹீஹ் முஸ்லிம் கிதாபுத் தஹாரத் பாபு ஃபஸ்லுல் உலூயி ஹதீஸ் 534) அதேபோன்று டியூட்டி கொடுக்கும் அனைவரும் அவர்கள் எங்கு டியூட்டி கொடுத்துக் கொண்டிருந்தாலும் எல்லா இடங்களிலும் என்ன சூழல் ஏற்பட்டாலும் தவறான தாக்கம் ஏற்படும் வகையில் உங்கள் செயல்பாடு இருக்கக் கூடாது. எப்போதும் சிரித்த முகத்துடன் டியூட்டி கொடுங்கள். என்ன சூழல் ஏற்பட்டாலும் சரியே. குறிப்பாக டியூட்டி கொடுப்பவர்களும் மற்றவர்களும் எப்போதும் சுற்றுப்புறத்தை கண்காணித்து வாருங்கள். இது பாதுகாப்பிற்கு மிகவும் அவசியம் ஆகும். இன்றைய உலகச் சூழலில் இது மிகவும் அவசியமாகும்.

எல்லாவற்றையும் விட அதிகமாக துஆக்களில் அதிக அழுத்தம் தாருங்கள். துஆக்கள் மற்றும் இறைவனை நினைவு கூர்வதில் நேரத்தைச் செலவிடுங்கள். உங்களுக்காகவும் ஜமாஅத்திற்–காகவும் முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்யுங்கள். காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் கிடைப்பதற்காக துஆ செய்யுங்கள். பொதுவாக உலகத்திற்காகவும் துஆ செய்து வாருங்கள். வேகமாக அழிவின் பக்கம் உலகம் செல்கிறது. அல்லாஹ் அழிவிலிருந்து உலகத்தைக் காப்பாற்றுவானாக. மக்களுக்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. தமது இறைவனை அடையாளம் காண்பவர்களாக அவர்கள் ஆகி விடட்டுமாக.

★ ★ ★ ★ ★

**திருக்குர்ஆனிலிருந்து...**

*மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களது இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால், நீங்கள் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம். (2:22)*

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு. மேலப்பாளையம்.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்குக் கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)*

**பீ.ஜே. சுலைமான்**
மற்றும் குடும்பத்தினர், கோயம்புத்தூர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*ஆணவத்திலிருந்து விலகிக் கொள்ளுங்கள் என நான் என் ஜமாஅத்திற்கு அறிவுறுத்துகிறேன். ஏனென்றால் கண்ணியமிக்க நமது இறைவனின் பார்வையில் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும்.*

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

*இவ்வுலகில் இறைவனைப் பார்க்கும் பேறிழந்தவர்கள் மறுமையிலும் இருளிலே இருப்பர். இறைவன் கூறுகிறான். இவ்வுலகில் குருடராக இருப்போர் மறுமையிலும் குருடராகவே இருப்பர். (17:73)*

**K. சலீம் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, திருச்சி.

**திருக்குர்ஆனிலிருந்து...**

*ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்துத் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக்கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும், அல்லாஹ் உங்களை ஒன்று சேர்ப்பான்...... (2:149)*

**மர்ஹூம் முஹம்மது யூசுஃப்**
மற்றும் குடும்பத்தினர், உடன்குடி.

**ALIF AUTO CARE**
Pudupet, Chennai.
Ph: 98847 74525

**CITY HARDWARE STORE'S**
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி இறைவனின் வடிவத்தைப் பார்ப்பதற்கான கண்ணாடியாக இருக்கின்றார். இந்த கண்ணாடியின் மூலமாக இறைவனின் முகம் தென்படுகின்றது.

**மர்ஹூம் A.N.A. ஹா:.பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

இவ்வுலக வாழ்க்கையிலும், சாட்சிகள் எழுந்து நிற்கும் நாளிலும் நிச்சயமாக நாம் தூதர்களுக்கும் நம்பிக்கை கொண்டவர்களுக்கும் உதவி செய்வோம். (40:52)

**மர்ஹூமா இலாஹி ஜைனப் கனி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) உமக்கு எதனைப் பற்றிய அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். (ஏனென்றால்) காது, கண், மனம் இவை எல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உறுதியாக அறிந்து கொள்க. கண்ணின்றி காண முடியாதது போன்று, காதின்றி கேட்க முடியாதது போன்று நாவின்றி பேச முடியாதது போன்று திருக்குர்ஆனின் உதவியின்றி அந்த அன்பிற்குரிய இறைவனின் முகத்தைப் பார்க்க இயலாது.

**ஜலாலுத்தீன்**
சத்ர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

0422-2399980, 4351980
email: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com

**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE



276, N.H. Road, Coimbatore - 641 001.

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

**O.A.N. DOORS & STEELS**



All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## திருக்குர்ஆனிலிருந்து...

தொழுகையை நிலைநாட்டுங்கள். ஸக்காத்தைக் கொடுங்கள். நீங்கள் உங்களுக்காக முன் கூட்டியே அனுப்பும் நன்மையையே நீங்கள் அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயல்களைப் பார்ப்பவனாவான். (2:111)

**முஹம்மது ஹுஸைன்**
பழனி

Q4Q
Bamboo Village
MULTI CUISINE RESTAURANT
Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்கள் அந்த இறைவன் மீதுள்ள பேரன்பிலும் நேசத்திலும் தங்களை மாய்த்துக் கொள்கின்றனரோ, மேலும் சுயமே தாங்கள் இருப்பது போன்றே அவனது ஏகத்துவம் மற்றும் கம்பீரம் வெளிப்பட வேண்டும் என்று விரும்புகின்றவர்களாக இருக்கின்றனரோ அவர்களை தவிர வேறு எவருக்காகவும் இறைவன் தனது மகத்தான அடையாளங்களை வெளிப்படுத்துவதில்லை.....

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

A.M. Zakir Hussain
✆ +91 98429 41237

**METAPLAST**
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.
Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

வானத்தில் இறைவன் உங்கள் மீது திருப்தி கொள்ள வேண்டுமென்று எண்ணினால் நீங்கள் ஒருவருக்கொருவர் ஒரே வயிற்றில் பிறந்த இரு சகோதரர்களைப் போல் ஆகிவிடுங்கள்.

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

**ரஹ்மானியா**
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஓரிறைக் கொள்கை ஓர் ஒளியாகும். அது அகத்திலும் புறத்திலும் உள்ள பொய்க் கடவுள்களை மறுப்பதன் பின் உள்ளத்தில் உருவாகிறது. பின்னர் அது மனித உடலின் ஒவ்வொரு அணுவிலும் பரவி விடுகிறது. எனவே இதனை அல்லாஹ் மற்றும் அவனின் தூதர் மூலமேயன்றி மனித ஆற்றல்களால் எவ்வாறு பெற முடியும்?

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

எங்கள் இறைவன் அல்லாஹ் எனக் கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர். (41:31)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

பூமியில் ஆணவங்கொண்டு நடக்காதீர். ஏனென்றால், இதனால் நாட்டின் எல்லையையும், உம்மால் அடைந்து விட முடியாது. (இவ்வாறு செய்வதனால் சமுதாயத்) தலைவர்களது உயர்ந்த அந்தஸ்தையும் உம்மால் பெற்று விட முடியாது. (17:38)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

முஸ்லிம், கிறித்தவர், இந்து, ஆரியர் ஆகிய எல்லாருக்கும் நான் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறேன். உலகில் எவரும் எனக்குப் பகைவர் இல்லை. பாசமிக்க தாய் ஒருத்தி தன் குழந்தைகளை நேசிப்பதை விட மிகுதியாக மனிதயினத்தை நான் நேசிக்கிறேன்....

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

M. Abdul Raoof
✆ +91 9362 2272 29

SUCCESS INDIA
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

## நஸாரத் தஃலீம் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் தரப்பிலிருந்து 2017 ஆம் ஆண்டிற்காக நடத்தப்படும் கட்டுரைப் போட்டி

இந்தியா முழுவதும் உள்ள அஹ்மதி ஆண்கள், பெண்கள், மாணவ மாணவியரிடம் கட்டுரை எழுதும் தகுதியை வளர்ப்பதற்கும் அவர்களிடம் மறைந்திருக்கும் தகுதிகளை வெளியில் கொண்டு வருவதற்கும் ஒவ்வொரு வருடமும் பரிசுத் தொகை வழங்கப்படுகின்ற கட்டுரைப் போட்டி நடத்தப்படுகின்றது. இவ்வருடம் கட்டுரைப் போட்டிக்காக கீழ்க்காணும் தலைப்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தலைப்பு:**

**திருக்குர்ஆன் இறைவனின் இருப்பிற்கு ஒரு மகத்தான சான்றாகும்**

**The Holy Quran is the greatest proof of existence of God**

**கட்டுரைக்கான நிபந்தனைகள்:**

- கட்டுரை குறைந்தபட்சம் 5000 சொற்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். (இந்த சொற்கள் கட்டுரை எழுதுபவர் சுயமே பயன்படுத்தும் சொற்களாக இருக்க வேண்டும். அவர் குறிப்பிடும் மேற்கோள்கள் இதை தவிர்த்து உள்ளவையாகும். அவை இந்த சொற்களில் அடங்காது).
- கட்டுரை உருது, ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளில் ஏதாவது ஒரு மொழியில் எழுதப்பட வேண்டும்.
- கட்டுரை அழகிய கையெழுத்தில் இருக்க வேண்டும். காகிதத்தின் ஒரு பக்கத்தின் 2/3 பகுதியில் எழுதப்பட வேண்டும். காகிதத்தின் பின்புறத்தில் எதுவும் எழுதக் கூடாது.
- கட்டுரையில் எந்தப் பகுதியிலும் சிவப்பு மையைப் பயன்படுத்தி எழுதக் கூடாது.
- இந்தப் போட்டியில் கலந்து கொள்ள எந்த வயது வரம்பும் இல்லை.
- கட்டுரையில் குறிப்பிடப்படும் மேற்கோள்கள் ஆதாரத்துடன் இருக்க வேண்டும். பத்திரிகைகளின் கட்டிங்கை கட்டுரையுடன் இணைத்து அனுப்புவது மிகவும் சிறந்ததாகும்.
- கட்டுரையை நஸாரத் தஃலீமிற்கு அனுப்பி வைத்த பிறகு அதை திரும்ப அனுப்பும்படி கோருவதற்கான உரிமை கிடையாது.
- கட்டுரை எழுதுபவர் கட்டுரையின் முதல் பக்கத்தில் தனது பெயர், முழுமையான முகவரி, தொலைபேசி எண், மெயில் ஐடி ஆகியவற்றை எழுத வேண்டியது அவசியமானதாகும்.
- கட்டுரைக்கான எல்லா உரிமைகளும் நஸாரத் தஃலீமை சார்ந்திருக்கும். கட்டுரையை எழுதுகின்ற எவருக்கும் சுயமே தனது கட்டுரையை வெளியிடுவதற்கான அனுமதி வழங்கப்பட மாட்டாது.
- போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றி பெறுபவர்களுக்கு முறையே 5000 ரூபாய், 4000 ரூபாய் மற்றும் 3000 ரூபாய் கொண்ட ரொக்கப் பணம் பரிசாக வழங்கப்படும்.
- கட்டுரை 30 நவம்பர் 2017 -ற்குள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ நஸாரத் தஃலீம் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியானுக்கு வந்து சேர வேண்டும்.

– நஸாரத் தஃலீம் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா – காதியான்.

## தஹ்ரீகே ஜதீதின் இறுதி மாதங்களில் தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்களிடம் அல்லாஹ்வுக்காக முழுமையான ஒத்துழைப்பு நல்குமாறு உருக்கமான வேண்டுகோள்

ஜமாஅத் சகோதரர்கள் அறிந்திருப்பது போன்றே தஹ்ரீகே ஜதீதின் வாக்குறுதிகள் கடந்த வருடம் நவம்பர் 1 ஆம் தேதியிலிருந்து துவங்கி அக்டோபர் 31 ஆம் தேதி முடிவடைகின்றது. நடப்பு ஆண்டின் 9 மாதங்கள் கழிந்து விட்டன. அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் ஜமாஅத் சகோதரர்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தஹ்ரீகே ஜதீதின் 83 -வது வருடம் துவங்கியதன் அருளுக்குரிய அறிவிப்பைச் செய்தவாறு 11 நவம்பர் 2016 அன்று நிகழ்த்திய குத்பா ஜுமுஆவில் கூறியவற்றை நிறைவேற்றும் வகையில் தங்கள் வாக்குறுதிகளில் மகிழ்ச்சி தரக்கூடிய வகையில் அதிகரிப்பு செய்துள்ளனர். ஆனால், 9 மாதங்களுக்கும் அதிகமான காலக்கட்டம் கடந்த பிறகும் கூட சில ஜமாஅத்துகளில் வாக்குறுதிகளுக்கு எதிரில் வசூல் மிகவும் குறைவாக இருப்பது கவலையளிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஆனால், தஹ்ரீகே ஜதீது சந்தாவை விரைவாக செலுத்துவது தொடர்பாக தஹ்ரீகே ஜதீதின் தோற்றுனர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு வலியுறுத்திக் கூறுகின்றார்கள்:

“ஜமாஅத் சகோதரர்கள் தஹ்ரீகே ஜதீதின் சந்தாவை விரைவாக கொடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதனை வருடத்தின் இறுதி வரை செலுத்தலாம் என்ற நிலை இருக்கக் கூடாது. ஒருநாள் கிடைக்கின்ற நற்கூலியைக் கூட சாதாரணமானதாக கருதி அதை விட்டு விடக் கூடாது.”

(மஜ்லிஸே முஷாவரத்தில் 12 பிப்ரவரி 1936-ல் நிகழ்த்திய சொற்பொழிவு)

தஹ்ரீகே ஜதீது சந்தாவிலிருந்து செய்யப்படுகின்ற பெரும்பாலான செலவுகளுக்கு முழு உலகிலும் செய்யப்படும் தப்லீக் மற்றும் மார்க்கத்தைப் பரப்புகின்ற பணியுடன் தொடர்பு இருப்பதால் ஹுஸுர் அவர்கள் தஹ்ரீகே ஜதீது செயலர்களிடம் இவ்வாறு வலியுறுத்திக் கூறுகின்றார்கள்:

“தஹ்ரீகே ஜதீதிற்கு தனது பணிகளைச் செய்வதற்கு உடனடியாக ரூபாய்கள் தேவைப்படுகின்றன. எனவே, தஹ்ரீகே ஜதீது செயலர்கள் தொகையை ஒன்று திரட்டி வைக்காமல் உடனுக்குடன் வசூலான தொகையை பொருளாதார செயலர் (அதாவது வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது) அவர்களின் பெயரில் அனுப்பிக் கொண்டே இருக்க வேண்டும்.” (மாலி குர்பானி பக்கம் 34)

எல்லா மாவட்ட மற்றும் உள்ளூர் அமீர்களிடமும் ஜமாஅத் சகோதரர்களிடமும் தஹ்ரீகே ஜதீது செயலர்களிடமும் நாம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், அவர்கள் தத்தமது ஜமாஅத்துகளின் பட்ஜெட்டை ஆய்வு செய்தவாறு தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்கள் செய்துள்ள வாக்குறுதிகளை நூறு சதவிகிதம் முழுமையாக வசூல் செய்வது தொடர்பாக சிறந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். மேலும் தஹ்ரீகே ஜதீது இன்ஸ்பெக்டர்களுடன் முழுமையான ஒத்துழைத்து ஹுஸுர் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற துஆக்களிலிருநது பெரும் பங்கை பெற்றுக் கொள்கின்ற நற்பாக்கியத்தைப் பெற வேண்டும். அல்லாஹ் உங்களது அழகிய முயற்சிகளை ஏற்றுக் கொண்டவாறு தூய உள்ளம் கொண்ட ஜமாஅத் சகோதரர்களின் பொருளில் அசாதாரணமான அருளை ஏற்படுத்துவானாக. அவர்களுக்கு தனது அளவற்ற அருள்களையும் கருணையையும் வழங்குவானாக. ஆமீன்.

எளியவன்
வகீலுல் மால் தஹ்ரீகே ஜதீது

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 28 September 2017 Issue No. 39

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/- (Per Issue Rs. 6/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

அவ்வாறே அந்த ஜமாஅத் நம்பிக்கை கொண்டிருக்கின்றது. இஸ்லாத்திற்கு வெளியே ஓர் அணு அளவு அடி எடுத்து வைப்பது கூட அழிவிற்குக் காரணமாக இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். இதுவே எனது மார்க்கமாகும். அதாவது ஒருவர் எந்த அளவு அருள்களைப் பெற முடியுமோ எந்த அளவு இறை நெருக்கத்தைப் பெற முடியுமோ அவற்றை முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உண்மையான முறையில் கட்டுப்படுவதன் மூலமாகவும் அன்னார் மீது முழுமையாக அன்பு கொள்வதன் மூலமாகவும் மட்டுமே பெற முடியும். அது அல்லாமல் பெற முடியாது. இப்போது பெருமானார் (ஸல்) அவர்களின் வழியைத் தவிர நன்மையின் எந்த வழியும் இல்லை. எனினும், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இந்த உடலுடன் வானத்திற்குச் சென்றார்கள் என்றும் இதுவரை உயிருடன் நிலைத்து நிற்கின்றார்கள் என்றும் நான் ஒருபோதும் நம்பவில்லை என்பதும் உண்மையாகும். ஏனென்றால், இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்வதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கடுமையான இழிவும் அவமரியாதையும் ஏற்படுகின்றது. என்னால் ஒரு நொடிப் பொழுது கூட இந்த இழிவைச் சகித்துக் கொள்ள முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது **63** -வது வயதில் மரணமடைந்தார்கள் என்றும் தூய மதீனாவில் அன்னாரது கல்லறை இருக்கின்றது என்றும் எல்லாருக்கும் தெரியும். ஒவ்வொரு வருடமும் அங்கு ஆயிரக்கணக்கான இலட்சக்கணக்கான ஹாஜிகள் செல்கின்றனர். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாக அன்னாரது மரணம் பற்றி உறுதியாக நம்புவது அல்லது மரணத்தை அவர்களுடன் தொடர்புபடுத்திக் கூறுவது அவமரியாதையான செயல் என்றால் பிறகு நான் கூறுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக இந்த இழிவும் இந்த அவமரியாதையும் ஏன் உறுதியாக நம்பப்படுகின்றது ? ஆனால், நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்று கூறி விடுகின்றீர்கள். மவ்லூது ஓதுகின்றவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் அழகிய குரலில் பெருமானார் (ஸல்) அவர்களின் மரணம் பற்றிய சம்பவங்களை எடுத்துக் கூறுகின்றனர். நிராகரிப்பவர்களின் எதிரில் கூட நீங்கள் மிகவும் திறந்த உள்ளத்துடன் பெருமானார் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்கள். பிறகு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் தொடர்பாக என்ன தடை இருக்கின்றது ? என்று எனக்குப் புரியவில்லை. அது பற்றி கேட்டவுடன் உங்கள் கண்கள் சிவந்து விடுகின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்பாகவும் வஃபாத் என்ற சொல்லைக் கேட்டு விட்டு அதுபோன்றே நீங்கள் கண்ணீர் வடிப்பதாக இருந்தால் நமக்கும் துக்கம் ஏற்பட்டிருக்காது. ஆனால், வருத்தம் என்னவென்றால், நபிமார்களுக்கு முத்திரையாகவும் ஈருலக தலைவராகவும் இருப்பவர் தொடர்பாக அவரது மரணத்தை நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றீர்கள். ஆனால், எந்த நபர் சுயமே தன்னை பெருமானார் (ஸல்) அவர்களது பூட்ஸ்களிலிருந்து கயிறுகளை அவிழ்ப்பதற்குக் கூட தகுதியுள்ளவராகக் கருதவில்லையோ அவர் தொடர்பாக அவர் உயிருடன் இருப்பதாக நீங்கள் நம்புகின்றீர்கள். அவர் தொடர்பாக மவுத் என்ற சொல்லை நாவால் கூறியவுடன் உங்களுக்கு கோபம் வந்து விடுகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் இன்று வரை உயிருடன் இருந்தால் அதில் எந்தக் குற்றமும் இருந்திருக்காது. ஏனென்றால், எத்தகைய நேர்வழியை அவர்கள் கொண்டு வந்தார்கள் என்றால் அதற்கு இணையான ஒன்று உலகில் இல்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய செயலளவிலான நிலைமைகளைக் காட்டினார்கள் என்றால் ஆதமிலிருந்து இப்போது வரை எவராலும் அவர்களது முன்மாதிரியையும் அதற்கு இணையான ஒன்றையும் எடுத்துக் காட்ட முடியாது. நான் உங்களிடம் உண்மையாகவே கூறிக் கொள்கின்றேன். பெருமானார் (ஸல்) அவர்களின் தேவை உலகிற்கும் முஸ்லிம்களுக்கும் எந்த அளவு இருந்ததோ அந்த அளவு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் தேவை இருக்கவில்லை. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த அளவு அருளுக்குரியவர்களாகத் திகழ்ந்தார்கள் என்றால் அவர்கள் மரணமடைந்த போது நபித்தோழர்களின் நிலைமை பைத்தியக்காரர்களைப் போன்று ஆகி விட்டது. எதுவரையென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உறையிலிருந்து வாளை எடுத்தார்கள். மேலும் எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி மரணித்தவர் என்ற கூறுவாரோ நான் அவரது தலையை வெட்டி விடுவேன் என்று அவர்கள் கூறினார்கள். இத்தகைய உணர்வுப்பூர்வமான நிலைமையில் அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு ஒரு சிறப்பான ஒளியையும் தொலைநோக்குப் பார்வையையும் வழங்கினான். அவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி ஓர் உரை நிகழ்த்தினார்கள்.

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு தூதர் ஆவார்கள். அவர்களுக்கு முன் தோன்றிய எல்லா தூதர்களும் மரணமடைந்து விட்டனர் என்ற வசனத்தை அவர்கள் ஓதினார்கள். இப்போது சிந்தனை செய்யுங்கள். சிந்தனை செய்த பிறகு கூறுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்த தருணத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் இந்த வசனத்தை ஏன் ஓதினார்கள் ? இதில் அவர்களுக்கு என்ன நோக்கம் இருந்தது ? பிறகு அந்த நிலைமையில் அனைத்து நபித்தோழர்களும் அங்கு இருந்தனர். நான் உறுதியாகக் கூறுகின்றேன். நீங்கள் இதை மறுக்க முடியாது. அதாவது, பெருமானார் (ஸல்) அவர்களின் மரணத்தின் காரணமாக நபித்தோழர்களின் உள்ளத்தில் கடுமையான துக்கம் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் மரணத்தை அகால மரணமாகவும் குறித்த நேரத்திற்கு முன்னர் நிகழ்ந்த மரணமாகவும் அவர்கள் கருதினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மரணம் தொடர்பான செய்தியைக் கேட்க அவர்கள் விரும்பவில்லை. அத்தகைய நிலைமையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற கம்பீரமிக்க நபித்தோழர்கள் மிகுந்த உணர்வுடன் இருக்கும் நிலையில் இந்த வசனத்தை தவிர வேறு எதுவும் அவர்களது கோபத்தை அகற்றி இருக்க முடியாது. இந்த வசனம் அவர்களது ஆறுதலுக்குக் காரணமாக இருந்தது. அவர்களுக்கு ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்பது தெரிந்திருந்தால், அவர்களுக்கு அவ்விஷயத்தில் நம்பிக்கை இருந்திருந்தால் அவர்கள் உயிருடன் இருக்கும்போதே மரணித்துப் போயிருப்பார்கள். அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் பேரன்பர்களாக இருந்தனர். அவர்கள் உயிருடன் இருப்பதைத் தவிர வேறு எவரும் உயிருடன் இருப்பதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது. அந்நிலையில் தங்களது கண்களுக்கு முன்னால் பெருமானார் (ஸல்) அவர்கள் மரணித்திருப்பதைக் கண்ட பிறகும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் உயிருடன் இருப்பதாக அவர்களால் எவ்வாறு நம்ப முடியும் ? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் உரை நிகழ்த்திய பிறகு அவர்களது உணர்வு தணிந்து விட்டது. அந்த சமயத்தில் நபித்தோழர்கள் மதீனாவின் தெருக்களில் இந்த வசனத்தை ஓதியவாறு திரிந்து கொண்டிருந்தனர். மேலும் அந்த வசனம் ஒரு வகையில் இன்றே இறங்கியது என்று அவர்கள் கருதினர். அப்போது ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் இந்தக் கவிதையை எழுதினார்கள்.

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِىْ فَعَمِىَ عَلَيْكَ النَّاظِرُ
مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ فَعَلَيْكَ كُنْتُ اُحَاذِرُ

(இதன் பொருள்:

நீங்கள் எனது கண்களின் மணியாய் இருந்தீர்கள்.
இன்று எனது கண்கள் குருடாகி விட்டன.
இதற்குப் பிறகு எவர் வேண்டுமானாலும் மரணிக்கட்டும்.
உங்களது மரணம் தொடர்பான அச்சமே எனக்கு இருந்தது.)

(லெக்சர் லூதியானா. ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 258-262)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad